# புதிய ஜனநாயகம்

ஜனவரி 2015
ரூ.10.00



மணற்கொள்ளை:

## ஆற்றில் இறங்கு!
## அதிகாரத்தைக் கையிலெடு!!

# கழுத்தை இறுக்குது இலாபவெறி! தொழிலாளி வர்க்கமே கொதித்தெழு!!

பன்னாட்டு முதலாளிகளுக்கும், இந்தியத் தரகு முதலாளிகளுக்கும் இந்தியத் தொழிலாளி வர்க்கத்தை காவு கொடுக்கின்ற வகையில் தொழிலாளர் சட்டங்களை திருத்துவதற்கான மசோதாக்களை நாடாளுமன்றக் குளிர் கால கூட்டத்தொடரில் தாக்கல் செய்திருக்கிறது, மோடி அரசு.

தொழில் பழகுநர் (அப்ரண்டிஸ்), ஒப்பந்த (காண்டிராக்ட்) முறையை புகுத்துவது; நிரந்தரத் தொழிலாளி என்பதையே ஒழித்துக் கட்டி தினக்கூலி - மணிநேரக் கூலிகளாக்குவது; தினசரி 10-14 மணிநேரம் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை சட்டபூர்வமாகவே உருவாக்குவது; தொழிலாளர் ஆய்வாளரின் அதிகாரங்களைப் பறிப்பது; பெண் தொழிலாளர்களை இரவுப் பணியில் அமர்த்திக்கொள்ளலாம் என்பது உள்ளிட்ட இச்சட்டத் திருத்தங்கள் இந்திய தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்ற கொஞ்ச நஞ்ச உரிமைகளையும் பறித்தெடுத்து அவர்களைக் கொத்தடிமைகளாக மாற்றும் அபாயம் நிறைந்தவை.




இத்தகைய அபாயங்களை தொழிலாளர்களிடம் எடுத்துரைத்தும், ''பொறுத்திருந்ததும், பிளவுபட்டிருந்ததும் போதும். செங்கொடி ஏந்தி போர்க்களம் இறங்க வேண்டிய வேண்டிய தருணம் இது. தொழிலாளி வர்க்கமே கொதித்தெழு'' என்ற முழக்கத்தின் கீழ் தொழிலாளி வர்க்கத்தை அணிதிரட்டும் நோக்கிலும் தமிழகமெங்கும் தொழிலாளர் குடியிருப்பு பகுதிகளில், ரயில் - பேருந்து பிரச்சாரங்கள், ஆலைவாயில் - தெருமுனைக் கூட்டங்கள் என விரிவான பிரச்சார இயக்கத்தை கடந்த ஒன்றரை மாதங்களாக மேற்கொண்டது, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி.

இதன் தொடர்ச்சியாக, டிசம்பர் 17 அன்று தமிழகத்தின் இரண்டு மையங்களில் — சென்னை - திருப்பெரும்புதூரில் உள்ள தொழிலாளர் துறை உதவி ஆணையர் அலுவலகத்தை முற்றுகையிட்டும், கோவை சிங்கநல்லூர் பேருந்து நிலையம் எதிரில் சாலை மறியல் போராட்டத்தையும் நடத்தியது, பு.ஜ.தொ.மு. போலீசின் தடையை மீறி நடைபெற்ற இப்போராட்டங்களில் பெருந்திரளான தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்தினருடன் பங்கேற்று கைதாகினர்.

- பு.ஜ.செய்தியாளர்

# பாலியல் வக்கிரத்தைத் தூண்டும் ஆபாச பத்திரிக்கைகள் எரிப்புப் போராட்டம்!

டைம் பாஸ், சினிக்கூத்து, வண்ணத்திரை, குமுதம் உள்ளிட்ட பாலியல் வக்கிரத்தைத் தூண்டுகின்ற ஆபாசப் பத்திரிக்கைகள் எரிப்புப் போராட்டத்தை கடந்த டிசம்பர்-18 அன்று சென்னை - உயர்நீதிமன்றம் முன்பாக நடத்தியது புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி.

இதற்கு முன்னதாக, சென்னையில் உள்ள மகளிர் கல்லூரிகளான ராணிமேரி கல்லூரி, பாரதி மகளிர் கல்லூரி, காயிதே மில்லத், எஸ்.ஐ.இ.டி மகளிர் கல்லூரி, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, லேடி விலிங்டன் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மற்றும் சென்னைப் பல்கலைக் கழகம் ஆகிய கல்லூரிகளில் பாலியல் வக்கிரத்தைத் தூண்டும் ஆபாச பத்திரிக்கைகள் எரிப்புப் போராட்டத்திற்கு ஆதரவு திரட்டும் வகையில் மாணவிகள், மாணவர்கள், பேராசிரியர்கள், கல்லூரி முதல்வர் ஆகியோர்களை சந்தித்து கையெழுத்து இயக்கத்தை இவ்வமைப்பினர் நடத்தினர்.



சென்னை மதுரவாயல் முதல் பிராட்வே வரையிலும், பேருந்து, இரயில்களில் என மக்கள் அதிகம் கூடுமிடங்களிலும், பு.மா.இ.மு.வினர் உழைக்கும் மக்களை சந்தித்து பாலியல் வக்கிரத்தை ஒழித்துக்கட்ட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தனர். முக்கிய பேருந்து - இரயில் நிலையங்களில் நள்ளிரவிலும் பிரச்சாரத்தில் பு.மா.இ.மு.வைச் சேர்ந்த கல்லூரி மாணவிகள் ஈடுபட்டனர்.

பு.மா.இ.மு.வைச் சார்ந்த பள்ளி - கல்லூரி மாணவர்களும், இவர்களுக்கு ஆதரவாக பெண்கள் விடுதலை முன்னணியினரும் பங்கேற்று நடத்திய ஆபாச பத்திரிக்கைகள் எரிப்புப் போராட்டம் சாலை மறியல் போராட்டமாகத் தொடர்ந்தது. செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை அமைச்சர் நேரில் வந்து வாக்குறுதி தந்தால் மட்டுமே போராட்டத்தை விலக்கிக்கொள்வோம் என உறுதியாக போராட்டத்தை தொடர்ந்த பு.மா.இ.மு.வினரை போலீசார் வலுக்கட்டாயமாகக் கைது செய்தனர். ஆபாச பத்திரிக்கைகள் தடை செய்யப்படும் வரையில் தமது போராட்டம் தொடரும் என பு.மா.இ.மு.வினர் சூளுரைத்தனர்.

- பு.ஜ.செய்தியாளர்

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 30 இதழ்: 3

ஜனவரி 2015

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561


### ஜார்கண்ட், ஜம்மு-காஷ்மீர் தேர்தல் முடிவுகள்:

## புஸ்வாணமாகிப் போனது மோடி அலை! நிரந்தரமானது சாதி-மத பிளவு நிலை!!

அண்மையில் ஜார்கண்ட் மற்றும் ஜம்மு-காஷ்மீர் மாநிலங்களில் நடந்து முடிந்துள்ள சட்டமன்றத் தேர்தல்களின் முடிவுகள், ஆளும் இந்துவெறி கும்பலுக்கு பீற்றிக் கொள்ளுமளவுக்குப் பெரிய வெற்றியைத் தரவில்லை. நாடெங்கும் மோடி அலை தொடர்ந்து வீசுவதாக ஊதிப்பெருக்கிய இந்துவெறி கும்பல், இப்போது அப்படி எந்த அலையும் வீசாததையும் காஷ்மீர் பள்ளத்தாக்கு தனது கைக்கு வராத ஆத்திரத்தாலும் புளுங்குகிறது.

ஜம்மு-காஷ்மீரில் ‘வளர்ச்சி’ வந்தால் தீவிரவாதமும் பிரிவினைவாதமும் விழுந்துவிடும் என்று அரசியலுக்குப் பதிலாக மறுகாலனியாக்க வியாபாரத்தை மோடி கடைவிரித்த போதிலும், காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் 370-ஆவது சட்டப் பிரிவை நீக்க வேண்டுமென்ற தனது கொள்கையை வெளிப்படையாக அறிவிக்காமல் அடக்கி வாசித்த போதிலும், ‘‘44-க்கும் அதிகமான இடங்களைக் கைப்பற்றும் லட்சியம்’’ புஸ்வாணமாகிப்போனது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலை ஒப்பிடும்போது இப்போது அம்மாநிலத்தில் பா.ஜ.க.வின் வாக்கு சதவீதம் குறைந்து போயுள்ளதோடு, வெற்றி பெற்ற ஜம்மு தொகுதிகளைத் தவிர, மற்ற தொகுதிகளில் பா.ஜ.க.வால் டெபாசிட் கூடப் பெற முடியவில்லை. காங்கிரசு மற்றும் தேசிய மாநாட்டுக் கட்சிகளின் கூட்டணி முறிந்து போனதைச் சாதகமாக்கிக் கொண்டு, மத ரீதியான முனைவாக்கத்தைக் கட்டியமைத்து பா.ஜ.க.வால் கூடுதல் இடங்களைக் கைப்பற்ற முடிந்துள்ளதேயன்றி, அங்கு பா.ஜ.க.வுக்கு ஆதரவான அலை எதுவுமில்லை.

ஏறத்தாழ 66 சதவீத வாக்குப்பதிவைக் காட்டி, இது ஜனநாயகத்தின் வெற்றியாகவும் காஷ்மீர் மக்கள் தீவிரவாதத்தைப் புறக்கணித்துவிட்டதாகவும் ‘தேசிய’ப் பத்திரிகைகள் எழுதுகின்றன. ஆனால், ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தின் கீழ் போலீசும் துணை இராணுவப் படைகளும் பயங்கரவாத அட்டூழியங்களில் ஈடுபடுவதற்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டு, துப்பாக்கி முனையில் தேர்தலை நடத்தி, இதுதான் ஜனநாயகம் என்றால் அதைவிடக் கேலிக்கூத்து வேறெதுவும் இருக்க முடியாது.

ஜம்மு-காஷ்மீரில் நடைபெற்ற தேர்தலில் நான்குமுனை போட்டி காரணமாக எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காமல், ஓட்டுக்கட்சிகள் தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி சேர்ந்தால்தான் ஆட்சியமைக்க முடியும் என்ற இழுபறி நிலை ஏற்பட்டிருக்கிறது. ஜம்முவிலுள்ள இந்துக்கள் பா.ஜ.க.வுக்கும், காஷ்மீர் பள்ளத்தாக்கிலுள்ள முஸ்லிம்கள் இந்துவெறி பா.ஜ.க. காலூன்றுவதைத் தடுக்க மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் தேசிய மாநாட்டுக் கட்சிக்கும், லடாக்கிலுள்ள பௌத்தர்கள் காங்கிரசுக்கும் வாக்களித்துள்ளனர். இத்தகைய மத ரீதியான முனைவாக்கத்தைத் தீவிரப்படுத்துவது, ஜம்முவிலுள்ள இந்துக்களை முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டிவிடுவது, இதன் மூலம் அரசியல் ரீதியில் தீர்க்க வேண்டிய காஷ்மீர் பிரச்சினையை மதரீதியாகப் பிளவுபடுத்தி ஆதாயமடைவது என்பதே இந்துவெறிக் கும்பலின் நோக்கமாக உள்ளது.

அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ள மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிழைப்புவாதத்தைச் சாதகமாக்கிக் கொண்டு, அக்கட்சியுடன் சந்தர்ப்பவாதக் கூட்டணி சேர்ந்து ஆட்சியமைக்க பதவிவெறியோடு பா.ஜ.க. அலைகிறது. ஒருபுறம் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது என்ற பெயரில் பா.ஜ.க.வைத் தோளில் தூக்கி அதற்கு அங்கீகாரம் அளித்து கூட்டணி ஆட்சி அமைக்க முயற்சிக்கும் மக்கள் ஜனநாயகக் கட்சியானது பேரங்கள் படியாத நிலையில், மறுபுறம் மதச்சார்பின்மையைக் காப்பாற்றுவது என்ற பெயரில் காங்கிரசு மற்றும் தேசிய மாநாட்டுக் கட்சியுடன் மெகா கூட்டணி ஆட்சியமைக்கவும் முயற்சிக்கிறது. ஆனால், எந்தக் கூட்டணி ஆட்சி அமைந்தாலும் அது நித்திய கண்டம் , பூரண ஆயுசாகவே இருக்கும் என்பதையே ஓட்டுக் கட்சிகளுக்கிடையிலான பேரங்களும் இழுபறியும் காட்டுகின்றன.

பழங்குடியினர் பெரும்பான்மையாக உள்ள பின்தங்கிய மாநிலமான ஜார்கண்டில், பிற்பட்ட சாதியினரது சாதிய முனைவாக்கத்தைக் கட்டியமைத்துக் கொண்டு பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. அம்மாநிலத்தில் மறுகாலனியச் சூறையாடல் மேலும் தீவிரமாகி, பழங்குடியின மக்களின் வாழ்வாதாரங்கள் துப்பாக்கி முனையில் பிடுங்கப்பட்டு விரட்டப்படும் கொடூரம் அரங்கேறுவதற்கான சூழலும், ஜம்மு-காஷ்மீரில் மத ரீதியாக மக்களைப் பிளவுபடுத்தி, பள்ளத்தாக்கிலுள்ள முஸ்லிம் மக்களைத் தனிமைப்படுத்தி ஒடுக்குவதற்கான சூழலும் நிலவுவதையே அபாய எச்சரிக்கையாக இத்தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன. •

## ஆற்று மணல் கொள்ளை:

# தமிழகத்தைக் கவ்வியிருக்கும் பயங்கரவாதம்!

**மணற்கொள்ளையை, குடிநீரையும், விவசாயத்தையும், உயிரினச் சூழலையும், சமூகத்தின் வாழ்வாதாரத்தையும் நிரந்தரமாக அழிக்கின்ற பயங்கரவாத நடவடிக்கை எனப் புரிந்துகொள்வதே சரியானது.**

தமிழகத்தில் நடைபெற்று வரும் மணற் கொள்ளையில் மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், இதனை முன்நின்று நடத்துவது தமிழக அரசு என்பதுதான். இந்தியாவின் மற்ற மாநிலங்களிலெல்லாம், மணல் குவாரி தனியாருக்குக் குத்தகைக்கு விடப்படுகிறது. தமிழகத்தில் மட்டும்தான் மாநில அரசின் பொதுப்பணித்துறையே மணல் குவாரிகளை நடத்தி வருகிறது.

தனியார் மணற்கொள்ளைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில், மணற் கொள்ளை ஏற்படுத்தியுள்ள பாதிப்புகளை ஆராய்வதற்கு வல்லுநர் குழுவொன்றை நியமித்தது சென்னை உயர்நீதிமன்றம். பாதிப்புகளை ஆராய்ந்த வல்லுநர் குழு, மணற்குவாரிகளை அரசே ஏற்று நடத்துவதன் மூலம்தான், சுற்றுச்சூழல் பேரழிவைத் தடுத்து நிறுத்த முடியும் என்று பரிந்துரைத்தது.

உடனே மணல் குவாரிகளைப் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருவதாக அக்டோபர் 2003 - இல் அரசாணை பிறப்பித்தது ஜெ. அரசு. மணல் குவாரிகள் அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்படுவதால், ஆறுகள் நாசமாக்கப்படாமல் பாதுகாக்கப்படுமென்றும், மணல் விற்பனையின் மூலம் அரசின் வருவாய் அதிகரிக்கும் என்றும் வீடு கட்டுபவர்களுக்கு நியாயமான விலையில் மணல் கிடைக்கும் என்றும் பிரமைகள் பரப்பப்பட்டன.

உண்மையில் நடந்தது வேறு. பல மணற்கொள்ளையர்களின் வேட்டைக்காடாக இருந்த தமிழக ஆறுகள், ஜெயா-சசி கும்பல் என்ற ஒரு கொள்ளைக் கும்பலின் கட்டுப்பாட்டுக்கு வந்தன. அதன் பின்னர் 2007 - இல் ஆட்சிக்கு வந்த தி.மு.க., ஆளும் கட்சி என்ற முறையில் கொள்ளைக்கூட்டத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. அந்த வகையில் மணற்கொள்ளை அரசுடைமையாக்கப்பட்டது.

மன்னராட்சிக் காலத்தில், குடிமக்களைக் கொள்ளையடிக்கும் உரிமையைக் குறுநில மன்னர்களுக்கும் பாளையக்காரர்களுக்கும் வழங்கி விட்டு, அவர்களிடமிருந்து கப்பம் வசூலித்துக் கொண்ட சக்கரவர்த்திகளைப் போல, மணற்கொள்ளையைக் குத்தகைக்கு விட்டது ஜெ-சசி கும்பல். அரசிடம் லாரிகள் இல்லாத காரணத்தினால், லாரிகள் வைத்திருப்பவருக்கு மணல் அள்ளும் குத்தகையை வழங்குவதாகக் கேலிக்கூத்தானதொரு விளக்கம் அளித்து, ஆறுமுகசாமி என்ற நபரிடம் தமிழகம் முழுவதும் உள்ள ஆறுகளில் மணல் அள்ளுவதற்கான லிப்டிங் அண்டு லோடிங் காண்டிராக்டை வழங்கியது ஜெ. அரசு. திருட்டை அவுட் சோர்ஸ் செய்யும் இந்த ஏற்பாட்டின் மூலம், கையில் கறை படாமல் திருட முடிவதால் தி.மு.க. ஆட்சியிலும் இந்த ஏற்பாடு தொடர்ந்தது.

புற்றீசலாய் படையெடுத்துள்ள லாரிகள்... காவிரி ஆற்றுப் படுகையில் பகிரங்கமாக, எதற்கும் துணிந்து நடக்கும் மணற்கொள்ளை!



2004 முதற்கொண்டே மணற்கொள்ளை புதிய பரிமாணத்தை அடைந்தது. மண்வெட்டிகள் இருந்த இடத்தில் பொக்லைன் எந்திரங்கள் நுழைந்தன. அள்ளப் படும் மணலைக் குவித்து வைத்து, கொள்ளை லாபம் அடிக்கத் தோதாக ஸ்டாக் யார்டுகள் உருவாக்கப்பட்டன. யூனிட் (100 கன அடி) ஒன்றுக்கு ரூ.315 என்பது மணலுக்கு 2003 - இல் பொதுப்பணித்துறை நிர்ணயித்த விலை. அன்று அதைப்போல சுமார் பத்து மடங்கு இருந்த மணலின் சந்தை விலை இன்று 100 மடங்குக்கும் மேலாக உயர்ந்து விட்டது.

வெளி மாநிலங்களுக்கு மணலைக் கடத்துவதற்கு எதிராக ஆங்காங்கே மக்கள் போராடுவதும், லாரிகளைச் சிறைப் பிடிப்பதும் நடக்கவே, மணல் கடத்தலுக்கு எதிராக ஒரு கண் துடைப்புச் சட்டம் இயற்றப்பட்டது. ஆனால், இன்றைக்கும் கேரளத்துக்கும் கர்நாட கத்துக்கும் நாள் தவறாமல் ஆயிரத்துக்கும் மேற்பட்ட லாரிகள் மணலைக் கடத்திக் கொண்டுதான் இருக் கின்றன. சட்டப்படி ஆற்றுமணலை பிற மாநிலங் களுக்கு அனுப்ப முடியாது என்பதால், மணலுடன் சிறி தளவு சிமெண்டைக் கலந்து ''மதிப்புக்கூட்டப்பட்ட மணல்'' என்ற பெயரில் சட்டப்படியே மணல் கடத்தப் படுகிறது.

வெளி மாநிலங்களுக்கு மட்டுமின்றி, வெளிநாடு களுக்கும் மணல் கடத்தப்படுகிறது. இது கட்டுமானத் தேவைகளுக்கானது மட்டுமல்ல, விவசாயத்தையே பெயர்த்து ஏற்றுமதி செய்வது போல; காவிரி டெல்டா வின் வளமிக்க வண்டல் மண் உள்ளிட்ட தமிழகத்தின் வளமிக்க ஆற்று மணல் துபாய், மாலத்தீவுகள் உள்ளிட்ட பல நாடுகளுக்கும் கடத்தப்படுகிறது. இவ்வாறு கடத் தப்படும் மணலின் அளவு என்ன, அதன் மதிப்பு என்ன, பயன்பாடு என்ன, சந்தை விலை என்ன என்பவை யெல்லாம் யாரும் அறியாத மர்மங்கள்.

ஆகஸ்டு 2012 - இல் சி.என்.என்.-ஐ.பி.என் தொலைக்காட்சி தமிழகத்தில் நடத்திய ஆய்வின்படி நாளொன்றுக்கு குறைந்தபட்சம் இரண்டு லட்சம் டன் ஆற்று மணல், பொதுப்பணித்துறையின் கணக்கில் வராமல் கடத்தப்படுவதாகக் கூறுகிறது. தமிழகத்தில் ஓடு கின்ற சுமார் 50,000 மணல் லாரிகளில் மூன்றில் இரண்டு பங்கு லாரிகளுக்கு பர்மிட் கிடையாது என்பதும், ஒரே பர்மிட்டில் குறைந்த பட்சம் மூன்று லாரிகள் ஓடுகின்றன என்பதும் நாடறிந்த இரகசியங்கள்.

2011-21 ஆம் ஆண்டில் மொத்தம் 31,33,932 லாரி லோடு மணல் (ஒரு லோடுக்கு 2 யூனிட்) விற்கப்பட்ட தாகவும், அதிலிருந்து அரசுக்கு கிடைத்த வருவாய் ரூ.188.03 கோடி என்றும் பொதுப்பணித்துறை வெளியிட்டுள்ள புள்ளி விவரம் கூறுகிறது. (தி இந்து, செப் 3, 2012). இதன்படி பார்த்தால் சராசரியாக நாளொன்றுக்கு 8586 லாரி மணல் மட்டுமே அள்ளப் பட்டிருக்கிறது என்று ஆகிறது. 2012 - இல் சி.என்.என். தொலைக்காட்சி நடத்தியிருக்கும் ஆய்வோ நாளொன்றுக்கு 20,000 லாரி மணல் கணக்கில் வராமல் கடத்தப்படுவதாக கூறுகிறது.

உண்மையில் தமிழகத்தில் நடைபெற்றுவரும் மணற் கொள்ளையின் அளவு என்ன? இது பொதுப்பணித்துறை காட்டுகின்ற கணக்கைக் காட்டிலும் நிச்சயமாகப் பத்து மடங்கு அதிகமாக இருக்கும். கார்மாங்குடியில் உள்ள வெள்ளாறு மணல் குவாரியில் நடைபெற்று வந்த மணல் கொள்ளையை ஒரு மாதிரியாக (model) வைத்துப் பார்க்கும்போது மேற்கண்ட மதிப்பீட்டுக்கு நாம் வர முடிகிறது.

எந்த ஒரு ஆற்றிலும் மணல் அள்ளும் அனுமதி வழங்க கீழ்க்கண்ட அளவீட்டு முறையைப் பொதுப் பணித்துறை பின்பற்றுகிறது. உலக இடங்காணல் கருவியின் (Global positioning system set) துணை கொண்டு இத்தனை டிகிரி அட்சக்கோடுக்கும் தீர்க்கக் கோட்டுக்கும் இடையில் உள்ள, இன்னின்ன கிராமங் களின் எல்லைக்குள் வருகின்ற, இன்ன சர்வே எண்ணில் உள்ள, இத்தனை ஹெக்டேர் பரப்பளவுள்ள ஆற்றுப் பகுதியில் மணல் அள்ளிக் கொள்ளலாம் என்று பொதுப் பணித்துறை தனது அனுமதியில் குறிப்பிடுகிறது. இதனைப் பரிசீலிப்பதுடன், சூழலியல் தொடர்பான கட்டுப்பாடுகளையும் விதித்தபின் மாநில சூழலியல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (State level Environment Impact Assessment Authority) ஒப்புதல் அளிப்பதாக சொல்லப்படுகிறது.

அந்தக் குறிப்பிட்ட எல்லைக்குள், ''ஆற்றுப் படுகையின் மட்டத்தி லிருந்து ஒரு மீட்டர் ஆழத்துக்கு மட்டுமே மணல் அள்ள வேண்டும்; ஒரு மீட்டர் ஆழத்திலேயே தண்ணீர் ஊற்றெடுக்கும் பட்சத்தில் அந்த இடத்தில் மணல் அள்ளக்கூடாது.

சட்டப்பூர்வமான பதுக்கலின் மறுபெயரே மணல் யார்டு.



மணற் கொள்ளையன் ஆறுமுகசாமி, கிரானைட் கொள்ளையன் பி.ஆர்.பழனிச்சாமி, இரும்பு கனிமக் கொள்ளையன் ஜனார்த்தன ரெட்டி.

மணல் எடுக்கும் பகுதியை அடையாளம் காட்டும் விதத்தில் தூண்கள் நடப்பட்டு சிவப்புக் கொடி கட்டப் படவேண்டும். ஆற்றின் இருபுறமும் கரையிலிருந்து 50 மீட்டர் தூரம் வரையில் மணல் அள்ளக்கூடாது; மனித உழைப்பைப் பயன்படுத்தித்தான் மணலை அள்ள வேண்டும்'' என்பன போன்ற விதிமுறைகளைக் குறிப் பிடுவதுடன், மொத்தம் எத்தனை கன மீட்டர் மணலை அள்ளுவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது என்பதும் அந்த உத்தரவில் குறிப்பிடப்படுகிறது.

மேற்சொன்ன விதிமுறைகளுக்கு உட்பட்டு கார் மாங்குடி கிராமத்தில் வெள்ளாற்றில், மூன்றாண்டு காலத்தில், 19.1 ஹெக்டேர் பரப்பளவில், 1,91,000 கனமீட்டர் மணலை அள்ளுவதற்கு பொதுப்பணித் துறையும், மாநில சூழலியல் தாக்க மதிப்பீட்டு ஆணையமும் அனுமதி அளித்துள்ளன. ( Lr. No.SEIAA&TN/F.No. 1669/EC/1(a)/ 953 /2013 dated: 09.01.2014 )

தமிழகத்திலுள்ள எல்லா குவாரிகளையும் போலவே, கார்மாங்குடி குவாரியிலும் எந்தவித நிபந்தனையும் பின் பற்றப்படவில்லை என்பதுடன், அனுமதி அளிக்கப் பட்ட 19.1 ஹெக்டேர் எல்லைக்கு வெளியே வரைமுறை யின்றி ஆக்கிரமிப்பு நடந்திருக்கிறது.

மனித உரிமைப் பாதுகாப்பு மைய வழக்குரைஞர்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளின் பரப்பளவை ஜி.பி.எஸ். கருவியின் மூலம் அடையாளம் கண்டு அளந் திருக்கின்றனர். பல இடங்களில் 35 அடி ஆழம் வரை மணல் அள்ளப்பட்டு, ஆறே ஒரு திறந்தவெளிச் சுரங்க மாகக் காட்சியளிக்கிறது. இத்தகைய பிரம்மாண்டமான பள்ளங்களின் நீள, அகலம் மற்றும் ஆழத்தையும் அளந்து உத்தேசமாக எத்தனை கன மீட்டர் மணல் அள்ளப்பட் டிருக்கிறது என்றும் கணக்கிட்டிருக்கின்றனர்.

குவாரி இயங்கத் தொடங்கி பத்து மாதங்களாகின்றன. மூன்றாண்டு காலத்தில் மண்வெட்டியின் துணை கொண்டு மனித உழைப்பை பயன்படுத்தி எடுக்கப்பட வேண்டிய மொத்த மணலையும், அதாவது அனுமதிக் கப்பட்ட 1,91,000 கனமீட்டர் மணலையும், பொக்லைன் எந்திரங்களைப் பயன்படுத்தி முதல் மாதத்திலேயே அள்ளி முடித்து விட்டனர்.

அதன் பிறகு, அடுத்த 9 மாத காலத்தில் அனுமதிக்கப் பட்ட அளவைப் போல பத்து மடங்கு மணல் அள்ளப்பட்டிருக்கிறது. இதேநிலையில் மூன்றாண்டு காலம் முழுவதும் இந்தக் குவாரி இயங்க அனுமதிக்கப்பட்டால், அனுமதிக்கப் பட்டதைப் போல 36 மடங்கிற்கு மேல் மணல் அள்ளப்பட்டுவிடும். இருந்தபோதிலும், அனு மதிக்கப்பட்ட அளவுக்கு மட்டுமே மணல் எடுக் கப்பட்டதாகத்தான் பொதுப்பணித்துறை கணக்கு காட்டும். 2012 - ஆம் ஆண்டு முழுவதும் 31,33,932 லாரி மணல்தான் அள்ளப்பட்டிருக் கிறது என்று பொதுப்பணித்துறை கொடுக்கும் கணக்கு இத்தகையதுதான்.

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு குவாரியிலும் அனுமதிக்கப்பட்ட அளவைப் போல 10 மடங் கிற்கும் மேல் மணல் அள்ளப்படுகிறது. பொதுப் பணித்துறை நிர்ணயித்துள்ள விலையைப் போல

கச்சா எண்ணெய், நிலக்கரி உள்ளிட்ட கனிமவளங்களைச் சூறையாடும் 'தேசிய'க் கொள்ளையர்கள் முகேஷ் அம்பானி மற்றும் கௌதம் அதானி.

100 மடங்கு விலைக்கு சந்தையில் விற்கப்படுகிறது. இந்தக் கணக்கின் படி 2004 முதல் இன்றுவரை தமிழகத்தில் நடந்துள்ள மணல் கொள்ளையின் பண மதிப்பு பல இலட்சம் கோடி ரூபாய்களாக இருக்கும்.

இரும்பு, நிலக்கரி, பாக்சைட், கனிம மணல், கிரானைட் உள்ளிட்ட கனிமச் சுரங்கங்கள் எல்லாவற்றிலும் இந்த வழிமுறையைக் கையாண்டுதான் கொள்ளை நடத்தப்படுகிறது. பத்து ஏக்கருக்கு அரசாங்க உரிமத்தை வாங்கிக் கொண்டு நூறு ஏக்கரை சூறையாடுவது என்ற இந்த உத்தியைத்தான் ஆறுமுகசாமி, படிக்காசு, வைகுந்தராசன், பி.ஆர்.பி, ரெட்டி சகோதரர்கள் உள்ளிட்ட கொள்ளையர்கள் மட்டுமின்றி, டாடா, ஜின்டால், அம்பானி, அதானி போன்ற கார்ப்பரேட் முதலாளிகளும் பின்பற்றுகிறார்கள்.

நிலக்கரி, இரும்பு, கிரானைட் கொள்ளைகளைக் காட்டிலும் மணற் கொள்ளை தோற்றுவிக்கும் இந்தப் பேரழிவு கொடியது. மணல் திருடப் படுகிறது என்று இதனைப் புரிந்து கொள்வதை விட, ஆறுகளே திருடப் படுகின்றன என்று புரிந்து கொள்வதே சரியானது. இதனைத் திருட்டு என்றோ கொள்ளை என்றோ என்று புரிந்து கொள்வதை விட, குடிநீரையும், விவசாயத்தையும், உயிரினச் சூழலையும், சமூகத்தின் வாழ்வாதாரத்தையும் நிரந்தரமாக அழிக்கின்ற பயங்கரவாத நடவடிக்கை என்று புரிந்து கொள்வதே சரியானது. இது சமூகத்துக்கு எதிரான ஒரு பயங்கரவாத நடவடிக்கை. ஆனால், இதுதான் வளர்ச்சி என்றும் முன்னேற்றம் என்றும் சித்தரிக்கப்படுகிறது. அரசாங்கக் கொள்கையாக அமல் படுத்தப்படுகிறது.

பயங்கரவாதிகள் தமது நடவடிக்கையை இலாபகரமான தொழிலாக நடத்துவதில்லை. பேரழிவை ஏற்படுத்தும் தமது பயங்கரவாத நடவடிக்கை மூலம் பல இலட்சம் கோடி இலாபமும் ஈட்டுகிறார்கள் மணற்கொள்ளையர்கள்.

• தொரட்டி

### ஆற்று மணல் கொள்ளை:

# கொல்லப்படுவது நதிகள் மட்டும்தானா?

**ஆற்று மணல் கொள்ளை நதிகளையும் அதில் வாழும் தாவரங்களையும் உயிரினங்களையும் அழிப்பதோடு, சமூகப் பேரழிவுகளையும் உருவாக்கும் என்கிறார், பேராசிரியர் அருணாசலம்.**


ஆற்று மணற்கொள்ளை தமிழகத்தின் நதிகள் அனைத்தையும் அடியோடு நாசப்படுத்தி வருகிறது. இக்கொள்ளையின் பண மதிப்பு ஒருபுறமிருக்க, இதனால் ஏற்படும் வேறு பாதிப்புகள் - நிலத்தடி நீர் மட்டம் சரிவது, குடிநீர்த் தட்டுப்பாடு, விவசாய நிலங்கள் தரிசாவது போன்றவை ஒரு பேரழிவை நோக்கித் தமிழகத்தைத் தள்ளிவருகின்றன. இம்மணற்கொள்ளையைத் தடுத்து, தமிழக நதிகளைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு முன்னெடுக்கப்படும் போராட்டங்களை மணற்கொள்ளை மாஃபியா கும்பல்கள் இலஞ்சத்தின் மூலம் சீரழித்து வேரறுத்துவிடுகின்றன. அல்லது, அச்சுறுத்தல், கொலை, வழக்கு, சிறை எனக் கொடூரமாக ஒடுக்கித் தோற்கடித்துவிடுகின்றன. இப்படிப்பட்ட நிலையில் கார்மாங்குடி மணல் குவாரியை எதிர்த்து, ஆசைக்கும் அச்சுறுத்தல்களுக்கும் பணியாத மக்கள் திரள் போராட்டம் வெடித்திருக்கிறது.

விருத்தாசலம் நகருக்கு அருகேயுள்ள கார்மாங்குடி கிராமத்தையொட்டி ஓடும் வெள்ளாறில் அமைந்துள்ள மணல் குவாரியை மூடக் கோரி அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் ஆதரவோடு நடத்தி வரும் தொடர் போராட்டங்களின் விளைவாக அம்மணல் குவாரியைத் தற்காலிகமாக மூடியிருக்கிறது, தமிழக அரசு. இப்போராட்டம் தொடர்பாக அக்கிராம மக்களையும் அப்போராட்டத்தை முன்னின்று நடத்திவரும் வெள்ளாற்றுப் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த முன்னணியாளர்களையும் சந்தித்த நாம், இது தொடர்பாகவும் தமிழகத்தில் நடந்துவரும் ஆற்று மணல் கொள்ளை தொடர்பாகவும் மேலும் விவரங்களைச் சேகரிக்க முடிவு செய்து, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் சுற்றுப்புறச் சூழல் அறிவியல் புலத்தின் தலைவரும் பேராசிரியருமான முனைவர் அருணாசலம் அவர்களைச் சந்தித்து உரையாடினோம்.

தாமிரபரணி ஆற்றில் மணல் அள்ளுவதைத் தடைசெய்யக் கோரி தொடரப்பட்ட வழக்கில், அது தொடர்பாக ஆய்வு செய்ய உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையால் நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட கமிட்டியில் பேராசிரியர் அருணாசலமும் ஒருவர். தாமிரபரணியில் விதிமுறைகளை மீறி மணல் கொள்ளையடிக்கப்பட்டிருந்ததையும், அதனால் ஏற்பட்டிருந்த பாதிப்புகளையும் அறிக்கையாக அளித்த பேராசிரியர் அருணாசலம், தாமிரபரணியில் மணல் அள்ளுவதைத் தடைசெய்யும்படி நீதிமன்றத்திற்குப் பரிந்துரை செய்தார். இக்கமிட்டி அளித்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தாமிரபரணியில் ஐந்தாண்டுகள் மணல் அள்ளுவதற்குத் தடை விதித்து உத்தரவிட்டது, உயர் நீதிமன்றம்.

கார்மாங்குடி மணல் குவாரியில் நாம் எடுத்திருந்த புகைப்படங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே, ‘‘ஒரு ஆறு எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு இதுவொரு உதாரணம்’’ எனக் கூறினார், அவர். சத்தியமான வார்த்தைகள் இவை. கார்மாங்குடி மணல் குவாரியில் கால் வைத்தவுட

னேயே ஏதோவொரு வேற்று கிரகத்தில் இறங்கிவிட்ட உணர்வுதான் எமக்கும் மேலிட்டது. ஒருபுறம் 30 அடி ஆழமுள்ள கிடுகிடு பள்ளம்; இன்னொருபுறம் இரண்டு ஆள் மட்டத்திற்கு அரைவட்ட வடிவில் முக்கால் கி.மீ. தொலைவுக்குச் செல்லும் கணவாய் போன்ற பள்ளம். கட்டாந்தரையைத் தொடும் அளவிற்கு மணலை வாரி எடுத்துச் சென்றதால் விட்டுவிட்டு உருவாகியிருக்கும் தண்ணீர் தேங்கி நிற்கும் குட்டைகள்; கழிவு மணலைக் கொட்டியதால் உருவாகியிருக்கும் திட்டுகள்; மணலை அள்ளிச் செல்வதற்காக ஆற்றினுள் குறுக்கும் நெடுக்குமாகப் போடப்பட்டிருந்த சாலைகள் என அந்த ஆறு சிதைந்து சின்னாபின்னாமாகியிருந்தது. பேராசிரியர் அருணாசலம் சொன்ன வார்த்தைகள் வெள்ளாறுக்கு மட்டுமல்ல, மணல் கொள்ளை நடைபெறும் தமிழகத்தின் ஆற்றுப் படுகைகள் அனைத்திற்கும் பொருந்திப் போகும்.



தாமிரபரணியில் நடந்த மணற்கொள்ளையால் நேர்ந்த பாரதூரமான விளைவுகளை நீதிமன்றத்திடம் அறிக்கையாக அளித்த பேராசிரியர் எம்.அருணாசலம்.

வெள்ளாறில் இந்த ஆண்டின் (2014) தொடக்கத்தில் தான் மணல் அள்ளுவதற்கான உரிமம் வழங்கப்பட்டுள்ளதை நாம் சுட்டிக்காட்டியவுடனேயே, ஓராண்டுக்குள்ளாகவே அங்கு அனுமதிக்கப்பட்ட அளவை விட பத்துமடங்கு மணல் கொள்ளை நடந்திருப்பதை இப்புகைப்படங்கள் காட்டுவதாகச் சொன் பேராசிரியர் அருணாசலம், இம்மணற்கொள்ளையால் வெள்ளாறில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை இயற்கை தானாகவே சீர்செய்து கொள்வதற்கு, அதாவது கொள்ளையடிக்கப்பட்ட மணலை இயற்கை உற்பத்தி செய்வதற்கு வெள்ளாறில் தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளுக்கு வெள்ளம் வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இயற்கையின் ஐம்பது ஆண்டு கால உற்பத்திப் பொருளை எவ்வித அறநெறிகளுக்கும் கட்டுப்படாமல் ஒரே ஆண்டில் கொள்ளையடித்திருப்பதுதான் உண்மையிலேயே பயங்கரவாதம்.

**ஆற்றின் உயிரோட்டம் குறித்து . . .**

''ஆற்றில் ஓடிவரும் நீரை மணல்தான் பிடித்து வைக்கிறது. கட்டாந்தரை தெரியும் அளவிற்கு, களிமண் வரும் வரையிலும் மணல் சுரண்டப்பட்டுவிட்டால், அந்த ஆற்றலை ஆறு இழந்துவிடுகிறது. அதன் பிறகு, ஆறும் நமது வீட்டு குழாயும் ஏறத்தாழ ஒன்றுதான். வீட்டுக் குழாய்கள் திறந்தவுடன் தண்ணீரைச் சடசடவெனக் கொட்டித் தீர்ப்பது போல, ஓடி வரும் நீரை விரைவாகக் கடலுக்குள் கொண்டு சேர்த்துவிடும் உயிரற்ற கடத்தியாக ஆறு மாறிவிடும். இப்படி கடலை நோக்கி வேகமாக ஓடி விடும் நீரை, கோபமான தண்ணீர் (angry water) எனக் குறிப்பிடுவோம்'' என்கிறார் பேராசிரியர் அருணாசலம்.

''நீரோட்டம் இருப்பது மட்டுமே ஆற்றின் அளவுகோல் இல்லை. நீரோட்டத்தோடு, ஆற்றின் கரைகள், அக்கரைகளை யொட்டி வளர்ந்திருக்கும் தாவர வகைகள், ஆற்றினுள் வளர்ந்து நிற்கும் புல் வகைகள், ஆற்று நீரில் கண்ணுக்குத் தெரியாமல் இருந்து வரும் மைக்ரோப்ஸ் (microbes) எனப்படும் நுண்ணுயிரிகள், அவற்றை உண்டு வாழும் மீன்கள் என இவையெல்லாம் சேர்ந்துதான் ஒரு நதியை உயிரோட்டமிக்கதாக வைத்திருப்பதைச் சுட்டிக்காட்டிய அவர், ''ஆற்று மணலை அடியோடு அள்ளுவதால் மட்டும்தான் அப்பகுதியின் நிலத்தடி நீர் மட்டம் பாதிக்கப்படும் என்றில்லை. மணலை அள்ளும்பொழுது ஆற்றின் கரைகளுக்குச் சேதம் ஏற்பட்டு, அவை பலவீனப்படும்பொழுது, ஆற்றின் கொள்ளளவு குறைந்து அதன் காரணமாகவும் மணல் அள்ளும் பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் பாதிப்படையும்'' என எச்சரிக்கிறார்.

''ஆறு உற்பத்தியாகும் இடம் தொடங்கி, அது சமவெளிப் பகுதியில் பாய்ந்து கடலில் கலக்கும் வரையிலும் அதன் இரு கரைகளிலும் வளர்ந்து நிற்கும் தாவர வகைகள் ஆற்றின் நீரோட்டத்திற்கு அவசியமானவை. அத்தாவரங்கள் ஆற்றின் கரைகளைப் பலப்படுத்துவதோடு, ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் தமது தேவைக்கும் அதிகமான நீரை உறிஞ்சி

கார்மாங்குடி மணல் குவாரியில் நடந்துள்ள மணற்கொள்ளையின் விளைவாக கட்டாந்தரையாகி, குட்டையைப் போல மாறிப்போன வெள்ளாற்றுப் படுகை மற்றும் வெட்டிக் கூறு போடப்பட்டுள்ள ஆற்றங்கரை.



வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் அரணாக விளங்குகின்றன. கோடைக் காலங்களில் தம்மிடமிருந்து நீரை வெளியேற்றுவதன் மூலம் ஆறு வறண்டு போய் விடாமல் காப்பாற்றுகின்றன.


ஆற்றுப் படுகையையொட்டியுள்ள மண்ணின் தன்மைக்கேற்ப இயற்கையாக வளரும் தாவர இனங்களுக்கு மட்டும்தான் ஆற்றின் நீரோட்டத்திற்கு உதவும் இந்த ஆற்றல் உண்டு. இந்த இயற்கை தாவரங்கள் அழிக்கப்பட்டால் அல்லது நதிக்கு அந்நியமான தாவர இனங்கள் அதன் கரைகளில் வளர்க்கப்பட்டால் இந்த தொடர்சங்கிலி விளைவுகள் அற்றுப் போய்விடும். மணிமுத்தாறு பாய்ந்துவரும் பகுதியில் அதற்கு அந்நியமான தேயிலை எஸ்டேட்டுகள் உருவாக்கப்பட்டிருப்பதன் காரணமாக அதனின் நீரோட்டமே பாதிக்கப்பட்டிருப்பதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இந்த மண்ணுக்கே உரிய தேக்கு மரங்களை எடுத்துக் கொண்டால், அவை தமது தேவைக்கும் அதிகமான நீரை இலைகளின் வழியாக ஆவியாக வெளியேற்றுவதன் மூலம், காடுகளின் தட்பவெப்பத்தை சமநிலைப்படுத்துவதோடு, மழைப் பொழிவுக்கும் உதவுகின்றன. கோடைக் காலங்களில் தமது நீர்த் தேவையைக் குறைத்துக் கொள்ள இலைகளை உதிர்த்துவிடுகின்றன. அதேசமயம், இந்த மண்ணுக்கு அந்நியமான யூகலிப்டஸ் மரங்கள் தாம் உறிஞ்சும் நீரை ஆவியாக வெளியேற்றுவதேயில்லை. அதனால்தான் யூகலிப்டஸ் மரங்கள் நிலத்தடி நீர்க் கொள்ளையனாக மக்களால் அடையாளம் காட்டப்படுகின்றன'' என இந்த உயிர்ச் சங்கிலியை அடுக்கடுக்காக அவர் விளக்கியபொழுது, ஆற்றையும் தாவரங்களையும் குறித்த நமது அறியாமையை எண்ணி வெட்கம் கொள்ள வேண்டியிருந்தது.

**வெள்ளாற்றின் உயிர் அறுக்கப்பட்டால். . .**

ஆற்றின் இந்த உயிரோட்டத்தையும் உயிர்ச்சங்கிலித் தொடரையும் பாதுகாக்கும் நோக்கில்தான், ''ஆற்றுப் படுகையில் மூன்று அடி ஆழம் வரை மட்டுமே தோண்டி மணலை அள்ள வேண்டும்; மணலை அள்ளுவதற்கு மனித சக்தியைத் தவிர, இயந்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது. ஆற்றினுள் எந்தெந்தப் பகுதியில் மணலை அள்ளுவதற்கு அனுமதி தரப்பட்டுள்ளது என்பதைக் கான்கிரீட் தூண்களும், கொடிக்கம்பங்களும் நட்டுப் பிரித்துக் காட்ட வேண்டும். மணலை அள்ளும்பொழுது ஆற்றின் இருபுறமும் உள்ள கரைகளுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படக் கூடாது. ஆற்றின் இரு கரைகளிலும், கரைகளையொட்டியுள்ள பகுதிகளிலும் காணப்படும் தாவரங்களைச் சேதப்படுத்தக் கூடாது. கழிவு மணலை ஆற்றில் கொட்டக்கூடாது. ஆற்றின் நீரோட்டப் பகுதியில் மணல் அள்ளக்கூடாது. மணலை அள்ளும் பொழுது நீர் ஊறினால், அந்தப் பகுதியில் மணல் அள்ளக் கூடாது. மணலை எடுத்துச் செல்வதற்கு ஆற்றுக்குள் நிரந்தரமான சாலை போன்ற அமைப்புகளை ஏற்படுத்தக் கூடாது; மணல் அள்ளும் போக்கில் ஆற்றுக்குள் குளம் போன்ற பள்ளங்களை ஏற்படுத்தக் கூடாது'' - என்றவாறு பல்வேறு சட்டங்களும், உச்சநீதி மன்ற வழிகாட்டுதல்களும் இருப்பதை எடுத்துக்கூறிய பேராசிரியர் அருணாசலம், இவை ஒவ்வொன்றும் கார்மாங்குடி மணல் குவாரியில் மீறப்பட்டிருப்பதைப் புகைப் படங்களை ஆதாரமாகக் கொண்டு சுட்டிக் காட்டினார்.

வெள்ளாறு பள்ளமும் மேடுமாகக் கூறு போடப்பட்டிருப்பது, அந்த ஆற்றின் போக்கையே - மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடும் ஆறு, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஓடுவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்ட அவர், கார்மாங்குடி மணல் குவாரியிலிருந்து கிட்டதட்ட 60 கி.மீ. தொலைவில் கடல் அமைந்துள்ளதால், இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறையும்பொழுது கடல் நீர் உள்ளே புகுந்துவிடும் அபாயமுள்ளது. ஆற்றுப் படுகையின் கட்டாந்தரை தெரியும் அளவிற்கு மணல் கொள்ளையிடப்பட்டு, கரைகள் பலவீனப்படுத்தப்பட்டு, கரைகளையொட்டியுள்ள தாவர இனங்கள் அழிக்கப்பட்டு ஆற்றின் நீர்ப் பிடிப்பு நிரந்தரமாகப் பாதிக்கப்படும் பொழுது, மணல் குவாரி அமைந்துள்ள ஆற்றுப்படுகையின் 30 கி.மீ. சுற்றளவிற்கு நிலத்தடி நீர் மட்டம் பாதிக்கப்படுவதோடு, நிலத்தடி நீரின் தன்மையும் மாறிவிடும்.





கார்மாங்குடியை சுற்றியுள்ள கிராமப் புறங்களில் நெல்லும் கரும்பும் சாகுபடி செய்யப்படுகிறது. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, கடல் நீர் உள்ளே புகுந்தால் இந்தச் சாகுபடி படிப்படியாக அழிவைச் சந்திக்க நேரிடும். நிலத்தடி நீர் மட்டம் குறைந்து பூமிக்கடியில் வெற்றிடம் ஏற்படும்பொழுது, இக்கிராமப்புறங்களில் உள்ள கான்கிரீட் கட்டிடங்கள் பூமிக்குள் சிறுகச்சிறுக இறங்கும் அபாயமுண்டு என்றெல்லாம் மணல் கொள்ளையின் பாதிப்புகளைப் பட்டியலிட்ட பேராசிரியர்

அருணாசலம், ''இந்தப் பாதிப்புகள் உடனடியாக நேர்ந்துவிடாது; ஆனால், காலப்போக்கில் இப்பகுதியைச் சேர்ந்த எதிர்கால சந்ததியினர் இத்தகைய அபாயங்களைச் சந்திக்க நேரிடும்'' என எச்சரித்தார்.

**தமிழக நதிகளின் சிறப்பு, மணல் கொள்ளைக்கா?**

''குன்று நீரோட்டம், சமவெளி நீரோட்டம், கழிமுகப் பகுதி நீரோட்டம் என ஆறுகள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். தமிழக ஆறுகள் அனைத்தும் இந்த மூன்று அம்சங்களையும் கச்சிதமாகக் கொண்டிருப்பதுதான் அவற்றின் தனிச் சிறப்பு. குறிப்பாக, தமிழகத்தின் ஆறுகள் சமவெளிப் பகுதியில் அதிக தொலைவுக்கு ஓடிவருவதன் காரணமாகவே, இங்கு மணல் வளமும், மண் வளமும் செழித்துக் காணப்படுகின்றன'' என விளக்கிய அவர், ''கேரளாவில் 40-க்கும் மேற்பட்ட நதிகள் ஓடினாலும், அவை தமிழக ஆறுகளைப் போல சமவெளிப் பகுதியில் நெடுந் தொலைவு ஓடுவதில்லை. இதன் காரணமாகவே கேரள ஆறுகளில் பாயும் தண்ணீர் வீணாகக் கடலில் சென்று கலப்பதோடு, அவற்றிலிருந்து மண் எடுப்பதும் எளிதானதாகவும், மலிவானதாகவும் இருக்க சாத்தியமற்றுப் போய்விட்டது'' என்பதைத் தெளிவுபடுத்தினார்.



ஆற்றின் போக்கையும், மண் குவியும் இடத்தையும் காட்டும் வரைபடம்.

தமிழகத்திற்கு இயற்கை தந்திருக்கும் இந்தக் கொடை வரைமுறையின்றிச் சுரண்டப்பட்டு அழிக்கப்படுவது நமது காலத்தின் கொடுந்துயரம். இந்தியாவின் வேறெந்த மாநிலத்திலும் இத்தகையதொரு மணல் கொள்ளை நடப்பதைக் காண முடியாது. ''அசாம் மாநிலத்தில் உள்ள கவுகாத்தி பல்கலைக்கழகத்திற்கு அருகில் ஓடும் பிரம்மபுத்திரா நதியின் அகலம் கிட்டதட்ட 9 கி.மீ. இருக்கும். ஒரு கரையிலிருந்து மறு கரையைப் பார்க்கக்கூட முடியாது. அப்படிபட்ட வற்றாத, பிரம்மாண்டமான நதியில்கூட இயந்திரங்களைக் கொண்டுவந்து இறக்காமல், மனித உழைப்பைப் பயன்படுத்திதான் மண் அள்ளப்படுவதை நான் நேரடையாகவே பார்த்தேன்'' எனக் குறிப்பிட்ட பேராசிரியர் அருணாசலம், ''ஆற்று மணலை அள்ளாமல் போனால் வளர்ச்சி முடமாகிப் போய்விடும்'' என இந்தக் கொள்ளைக்கு ஆதரவாக வைக்கப்படும் வாதத்தின் மோசடித்தனத்தையும் அம்பலப்படுத்தினார்.

**தமிழக மணல் எங்கே போகிறது?**

கேரளாவில் ஆற்று மணல் அள்ள தடை விதிக்கப்பட்டிருப்பதால், அம்மாநிலத்தின் வளர்ச்சி தடைபட்டுப் போய்விட்டது எனச் சொல்ல முடியுமா? என்ற நியாயமான வாதத்தை முன்வைத்த பேராசிரியர், '' ''தமிழகத்தில் இதுவரை அள்ளப்பட்டுள்ள மணலை வைத்துக் கணக்கிட்டால், தமிழகத்தில் சிங்கப்பூர் அளவிற்கு கட்டுமானங்கள் உருவாகியிருக்க வேண்டும். அப்படிபட்ட வளர்ச்சி இல்லையெனும்பொழுது எடுக்கப்பட்ட மணலில் பெரும்பகுதி எங்கே போகிறது?'' என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டும். ''தமிழகத்திலிருந்து ஆண்டுதோறும் எவ்வளவு மணல் எடுக்கப்படுகிறது, தமிழகத்தின் மணல் தேவை என்ன என்பதையெல்லாம் வைத்துக் கணக்கிட்டுப் பார்த்தால் கடத்தப்படுவதற்காகவே மணல் கொள்ளையடிக்கப்படுவதை நாம் புரிந்துகொள்ள முடியும்'' எனத் தர்க்கரீதியாகத் தெளிவுபடுத்தினார்.

''வளர்ச்சி குறித்து இந்தியாவிற்கு பாடம் எடுத்து வரும் மேற்கத்திய நாடுகளில்கூட இந்த அளவிற்கு மணல் கொள்ளை நடப்பதில்லை'' எனக் கூறிய அவர், ''ஒரு ஆற்றில் ஆண்டுதோறும் எவ்வளவு மணல் சேருகிறது என்பதைக் கணக்கிட்டு அதற்கு ஏற்பவே அந்த நதியிலிருந்து மணலை அள்ளும் அளவை நிர்ணயிக்கும் மணல் பட்ஜெட் முறையை அந்நாடுகள் கடைப்பிடித்து வருகின்றன. இந்த மணல் பட்ஜெட் முறை அந்நாடுகளில் வளர்ச்சிக்கு எந்தவிதத்திலும் இடையூறாக இல்லை என்பதோடு, ஆறுகளையும் சாகடிப்பதில்லை'' என்றார். மேலும், மணலுக்கு மாற்றாக அந்நாடுகளில் எம்.சாண்ட், டால்கம் ஆகியவைப் பயன்படுத்தப்படுவதையும், கேரளாவில்கூட மணலுக்குப் பதிலாக எம்.சாண்ட் நடைமுறையில் இருப்பதையும் சுட்டிக் காட்டினார், அவர்.

''மனிதனால் உற்பத்தி செய்யப்படும் சிமெண்டிற்கு ரேஷன் முறை இருக்கிறது. ஒரு கட்டிடம் கட்டுவதற்கு எத்தனை சிமெண்ட் மூட்டைகள் தேவை என்பதும் கணக்கிடப்படுகிறது. ஆனால், மனிதனால் உற்பத்தி செய்ய முடியாத மணலுக்கு இந்தக் கட்டுபாடுகள் தமிழகத்தில் விதிக்கப்படவில்லை. கட்டுப்பாடற்ற இந்த மணற்கொள்ளைத் தமிழகத்தைப் பேரழிவின் விளிம்பில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது'' என்றார் அவர்.

**அரசு, அதிகார வர்க்கம் – மணற்கொள்ளையர்களின் பாதுகாவலன்!**

''இயற்கையின் கொடையான மணலைப் பாதுகாக்கும் பொறுப்பிலுள்ள பொதுப்பணித் துறை, வரு

வாய்த்துறை, போலீசு துறை அதிகாரிகளுக்கு மட்டுமல்ல, நீதிமான்களும் கூட கட்டுப்பாடற்ற மணற்கொள்ளையால் தமிழக ஆறுகளுக்கு நேர்ந்துவரும் பேரழிவைப் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். மணற் கொள்ளையால் விவசாயமும் சுற்றுப்புறச் சூழலும் பல்லுயிர்ப் பெருக்கமும் அழிவதை எடுத்து வைத்து வாதாடினால், நீதிமன்றங்கள் அவற்றை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. அதற்கு எதிராக வளர்ச்சி, வேலைவாய்ப்பு என்ற மோசடியான வாதத்தை முன்வைத்து இக்கொள்ளையைச் சட்டபூர்வமாக்கிட முயலுகிறார்கள். இனி வேலைவாய்ப்பு என்பதைக் காட்டி கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும் விபச்சாரத்தையும் அனுமதித்துவிடத் துணிந்துவிடுவார்கள் போல!'' என வேதனையோடு தெரிவித்த அவர், ''புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பசுமைத் தீர்ப்பாயங்கள் மிகவும் வெளிப்படையாகவே இயற்கை வளங்களைச் சூறையாடி வரும், அதனை மாசுபடுத்தி வரும் கும்பலுக்கு ஆதரவாக நடந்து கொள்வது இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான போராட்டத்திற்கு பெருந்தடையாக உள்ளது'' என அம்பலப்படுத்தினார்.

''ஆறுகளும் மணலும் தமிழக மக்களின் பொதுச் சொத்து. அரசு, இதனை மக்களின் சார்பில் பாதுகாக்க வேண்டிய பாதுகாவலன்தானே தவிர, இதனை விற்பனை செய்வதற்கான எஜமானமோ, ஏஜெண்டோ கிடையாது. ஆனால், இதனைப் பாதுகாக்க வேண்டிய அரசே இன்று இதனை அழிக்கும் வில்லனாக உருவெடுத்திருக்கிறது. எனவே, இனி அரசை நம்பாமல் ஆற்று மணல் உள்ளிட்ட இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் பொறுப்பையும் கடமையையும் பொதுமக்களே எடுத்துக்கொள்ள வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது'' என மாற்றுவழியை முன்வைத்த பேராசிரியர் அருணாசலம், ''வெள்ளாற்று பாதுகாப்பு இயக்கத்தையும் தமிழகத்தின் பல்வேறு கிராமப்புறங்களில் மணல் கொள்ளைக்கு எதிராகப் பொதுமக்கள் நடத்திவரும் போராட்டங்களையும் இதன் தொடக்கப்புள்ளியாக''க் கருதுவதாகக் குறிப்பிட்டார்.

இளங்கதிர் உதவியுடன்

● ஆர்.ஆர்.

# கார்மாங்குடி மணல் குவாரியை நிரந்தரமாக மூடு!

# ஆசைக்கும் அச்சுறுத்தலுக்கும் பணியாத மக்கள்திரள் போராட்டம்!




வெள்ளாற்றில் விருத்தாசலம் அருகில் உள்ள கார்மாங்குடி மணல் குவாரி, மக்கள் போராட்டத்தின் வலிமை கொண்டு மூடப்பட்டிருக்கிறது. மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் முன்முயற்சியில் நடத்தப்பட்ட இப்போராட்டம், மணற்கொள்ளை எதிர்ப்பு மக்கள் போராட்டங்களுக்கு ஒரு முன்மாதிரியாகும்.

மணற்கொள்ளைக்கு எதிராகப் பலர் போராடியிருக்கின்றனர். பலரும் மணற்கொள்ளையர்களால் கொல்லப்பட்டிருக்கின்றனர். பணத்தால் வாயை மூடு அல்லது பிணமாக்கி வாயை மூடு என்பதே மணற்கொள்ளையர்கள் அமல்படுத்தி வரும் விதி.

கார்மாங்குடி குவாரிக்கு எதிராகப் பல வடிவங்களில் போராடி மக்கள் நம்பிக்கை இழந்திருந்த சூழலில்தான் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் இப்பிரச்சினையில் தலையிட்டது. கரையோர கிராமங்களில் ம.உ.பா.மையத்துடன் இணைந்து புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியின் தோழர்களும் பிரச்சாரம் செய்தனர். மணல் கொள்ளையர்களின் இலஞ்சப் பணம் ஒவ்வொரு ஊரிலும் ஏற்படுத்தியிருந்த பாதிப்பு, நிலத்தடி நீர் பாதிப்பை விட மிகவும் கொடியதாக இருந்தது. குவாரியை எதிர்த்து யார் பேசினாலும், பணத்துக்காகத்தான் பேசுகிறான் என்று சந்தேகிக்கும் அளவுக்கு மக்களிடையே அவநம்பிக்கை பரவியிருந்தது. இந்த சூழலைக்கணக்கில் கொண்டு, ''மணல் கொள்ளையர்களிடம் காசு வாங்குபவர்களை எதிர்த்து'' தனது முதல் பிரச்சார சுவரொட்டியை வெளியிட்டது ம.உ.பா.மையம்.

''யாரும் சரியில்லை என்ற விரக்தியாகப் பேசிப் பயனில்லை. வாங்கின காசுக்காக குவாரிக்கு ஆதரவாக அயோக்கியன் வேலை செய்கிறான். யோக்கியன் ஏன் வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்கிறான்?'' என்று கிராமப் பிரச்சாரங்களின்போது ம.உ.பா. மைய மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜு

எழுப்பிய கேள்வி விவசாயிகள் பலரைச் சிந்திக்கத் தூண்டியது.

ஆர்ப்பாட்டம், வட்டாட்சியர் அலுவலக முற்றுகை போன்ற போராட்டங்கள் பரவலாக மக்கள் ஆதரவைப் பெருக்கின. ஆனால், அதிகார வர்க்கம் அசைந்து கொடுக்கவில்லை.

''வீட்டுக்கு ஒருவர் ஆற்றில் இறங்குவோம்! மணல் குவாரியை இழுத்து மூடுவோம்!!'' என்ற முழக்கத்துடன் டிசம்பர் 2-ஆம் தேதி அறிவிக்கப்பட்ட போராட்டம் மக்கள் மத்தியில் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. அன்று நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு வந்து ஆற்றில் இறங்குவார்கள் என்பதை அதிகார வர்க்கமோ போலீசோ எதிர்பார்க்கவில்லை. நிலைமை புரிந்தவுடன் அவசரம் அவசரமாக ஆற்றில் நின்றிருந்த மணல் லாரிகளை அப்புறப்படுத்தினர். அங்கிருந்து சில கி.மீ. தூரத்தில் இருந்த மணல் யார்டுக்கு பலத்த போலீசு பாதுகாப்பு போட்டனர். ஆற்றில் இறங்கிய மக்களோ நேராகச் சென்று பொக்லைன் எந்திரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். அந்த எந்திரத்தையே மேடையாக்கிக் கொண்டு மக்களிடம் உரையாற்றினார் தோழர் ராஜு.

''மணல் கொள்ளையன் என்று தனியாக யாரும் இல்லை. அரசுதான் இந்த கொள்ளையை நடத்துகின்றது. இந்த ஆற்றின் உரிமையாளர்கள் மக்கள். அதிகார வர்க்கத்துக்கு இதன் மீது எந்த உரிமையும் இல்லை. குவாரியை நிரந்தரமாக மூட வேண்டும் என்பது நமது கோரிக்கை. அதே நேரத்தில், 3 அடி அளவுக்குத்தான் மணல் அள்ள வேண்டும் என்று அனுமதி வாங்கிக் கொண்டு 30 அடி ஆழம் அள்ளியிருக்கிறார்களே, அந்த குற்றவாளிகளைக் கைது செய்யவேண்டும். சட்ட விரோத குவாரியை உடனே மூட வேண்டும்'' என்று பேசினார்.

மக்களைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டால், களைத்துப்போய் தாமே கலைந்து விடுவார்கள் என்று கணக்குப் போட்டது போலீசு. ''குவாரியை மூடாமல் இந்த இடத்தை விட்டு நாம் போகப்போவதில்லை'' என்ற ராஜுவின் அறிவிப்பை மக்கள் அப்படியே எதிரொலித்தனர். பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஆர்.டி.ஓ. அழைத்தார். ''தனியாகப் பேசுவதற்கு எதுவும் இல்லை, மக்கள் முன்னிலையில்தான் பேச்சுவார்த்தை''



வட்டாட்சியர் அலுவலக முற்றுகைப் போராட்டம்.



ஆற்று மணலைக் காக்க நூற்றுக்கணக்கில் திரண்ட மக்கள்!



இரவிலும் தொடர்ந்த களைத்துப் போகாத மக்கள் போராட்டம்.



என்று ராஜு கூறியதைப் பலத்த கையொலி எழுப்பி வரவேற்றார்கள் மக்கள்.

பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, கனிமவளத்துறை அடங்கிய ஒரு குழு அமைப்பதாகவும் முறைகேடு நடந்திருக்கிறதா என்று ஆய்வு செய்து ஒரு வாரத்தில் அவர்கள் அறிக்கை தருவார்கள் என்றும் கூறினார் ஆர்.டி.ஓ. ''எந்தக் குழுவின் ஆய்வறிக்கையைப் பற்றியும் எங்களுக்கு கவலை இல்லை. குவாரி வேண்டாம் என்பது மக்கள் கருத்து. எனவே, குவாரியை இந்தக் கணமே மூடவேண்டும். பொக்லைனை வெளியேற்ற வேண்டும்'' தனது கருத்தை ஒலிபெருக்கியில் அறிவிக்க, நூற்றுக்கணக்கான மக்களும் அதனை ஆமோதித்துக் குரல் எழுப்பினர்.

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கொண்ட ஆர்.டி.ஓ. உடனே மேலிடத்துடன் பேசி, குவாரியை தற்காலிகமாக மூடுவதாக அறிவித்தார். ''ஹிட்டாச்சியைக் கிளப்பு, கூடாரத்தைக் கலை'' என்று முழக்கமிட்டனர் மக்கள். மணற்கொள்ளையர்களின் கொட்டகைக்குத் தீ வைத்தனர் சிறுவர்கள். ''இது இறுதி வெற்றி என்று எண்ணாதீர்கள். நீங்கள் பல கோடி ரூபாய் பணத்தின் மீது அமர்ந்திருக்கிறீர்கள். உங்களை அப்புறப்படுத்தி விட்டு இதனை அள்ளுவதுதான் அந்த கொள்ளையர்களின் நோக்கம். அவர்கள் அவ்வளவு எளிதில் போய்விட மாட்டார்கள்'' என்று எச்சரித்து, டிசம்பர் 15 ஆம் தேதி பொதுக்கூட்டம் என்ற அறிவிப்பையும் வெளியிட்டார் ராஜு.

போராட்டத்தில் முன்னணியில் இருந்த இளைஞர் அறிவரசன் மீது கரும்பு சக்கையைக் கொளுத்தியதாக வழக்கு, கீற்றுக் கொட்டகையைக் கொளுத்தியதாக பள்ளிச் சிறுவர்கள் மீது வழக்கு - என அச்சுறுத்தலைத் தொடங்கியதுடன், சாதிப் பூசலையும் உருவாக்க முனைந்தது போலீசு. ''நாங்கள் தான் கொளுத்தினோம் என்று கிராமத்து மக்கள் அனைவரும் கைதாவோம்'' என்று பதிலடி கொடுத்தவுடன் போலீசு பின்வாங்கியது. பயமுறுத்தல் பலிக்காதென்று தெரிந்தவுடன் பணத்தால் அடித்துவிடலாம் என்ற துணிச்சலில், பொதுக்கூட்டத்துக்கு சில தினங்களுக்கு முன் மீண்டும் குவாரியை இயக்கத் தொடங்கினர்.

இவற்றையெல்லாம் முன்கூட்டியே எதிர்பார்த்து, கரையோரக் கிராமங்களில் வெள்ளாற்றுப் பாதுகாப்பு இயக்கம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, அதன் ஒருங்கிணைப்பாளராக மருங்கூர் திரு.பஞ்சமூர்த்தி மக்களால் ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மனித உரிமைப் பாதுகாப்பு மையத்துடன் இணைந்து பொதுக்கூட்டத்துக்குப் பதிலாக, 15-ஆம் தேதி குவாரியை மூடுவதற்கான போராட்டம் அறிவிக்கப்பட்டது.

முந்தின நாட்களில் மனித உரிமைப் பாதுகாப்பு மைய வழக்குரைஞர்களும் ம.க.இ.க. வின் மையக் கலைக்குழுவும் கிராமம் கிராமமாகச் சென்று பிரச்சாரம் செய்தனர். குவாரியை மூட முடியும் என்பதில் முன்னர் இருந்திராத நம்பிக்கை இப்போது மக்களிடம் தோன்றியிருந்தது.

ஒரு பெருந்திரள் மக்கள் போராட்டத்தின் அழகை, அதன் வீரியத்தை, வேகத்தை, மக்களின் முன்முயற்சியை டிசம்பர் 15-ஆம் தேதி காலையில் வெள்ளாற்றில் காண முடிந்தது.

இந்த முறை எந்திரங்கள் ஆற்றில் இருந்தால் அவை மக்களால் உருட்டித்தள்ளப்பட்டு விடும் என்ற அச்சத்தினால் அனைத்தையும் முன் கூட்டிய அகற்றியிருந்தனர். சென்ற முறை ஆர்.டி.ஓ. வும் போலீசும் கொதிக்கும் வெயிலில் 3 கி.மீ. தூரம் ஆற்றுக்குள் நடந்து வரவேண்டியிருந்தது. இந்தமுறை ஆற்றுக்குள் சாலை அமைத்து போலீசு வாகனங்களைக் குவித்திருந்தனர்.

கொதிக்கும் வெயிலைப் பொருட்படுத்தாமல் மக்கள் கூட்டம் குவிந்த வண்ணமிருந்தது. தாகத்தால் தவித்தால் கூட்டம் கலைந்து விடும் என்று கணக்கு போட்டு, தண்ணீர் லாரியை தடுத்து நிறுத்தியிருந்தது.



தனியறையில் பேச்சுவார்த்தை கிடையாது, மக்கள் முன்பே பேச்சுவார்த்தை என்ற மக்கள்திரள் வழியில் நடந்தது போராட்டம்.

அருகாமை கரும்பு வயல்களிலிருந்து கரும்பை ஒடித்து மக்களுக்கு விநியோகித்தனர் இளைஞர்கள். தாகத்தில் தவித்த பெண் போலீசாரும் கூச்சத்துடன் கரும்புத் துண்டுகளை வாங்கி கடித்துக் கொண்டனர்.

இடைப்பட்ட நாட்களில் ஆற்றினை அளந்து ஆய்வு செய்து முறைகேடு குறித்த புள்ளி விவரங்களைத் திரட்டியிருந்த ராஜு, அவற்றை மக்களுக்கு விளக்கி, இந்தக் கொள்ளையை நடத்துவதே அரசுதான் என்பதால், மக்கள் தங்களுடைய அதிகாரத்தைக் கொண்டுதான் ஆற்றைப் பாதுகாக்க வேண்டும் என்று விளக்கினார். மணல் கொள்ளை காரணமாக கரையோர கிராமங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை விளக்கியதுடன், ம.உ.பா. மையத்துடன் இணைந்து குவாரியை நாம் நிரந்தரமாக மூட முடியும் என்று நம்பிக்கையூட்டினார் மருங்கூர் பஞ்சமூர்த்தி.

நாட்டின் பல்வேறு இடங்களில் நடைபெற்ற மக்கள் போராட்ட அனுபவங்களை விரித்துக் கூறிய வழக்குரைஞர் வாஞ்சிநாதன், நீதிமன்றத்தால் ஒருக்காலும் இப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது என்பதையும் விளக்கினார். ம.க.இ.க. கலைக் குழுவினர் சளைக்காமல் நாள் முழுவதும் பாடிய வண்ணமிருந்தனர். ''வெள்ளாற்று மணலைக் காக்க வெள்ளமாக ஆற்றிலிறங்கு'' என்ற பாடல் அப்பகுதி மக்கள் அனைவரும் சேர்ந்து இசைக்கும் அவர்களது சொந்தப் பாடலாகவே மாறியது. ஆற்றிலேயே சோறு பொங்கி சாதி பேதமின்றி அனைவரும் அமர்ந்து உண்டனர். தேநீர், வேர்க்கடலை வியாபாரிகளும் வந்து சேர போராட்டம் ஒரு திருவிழாவின் தோற்றத்தைப் பெற்றுக் கொண்டது.



மக்களின் போராட்டத்தால் கார்மாங்குடி மணல் குவாரி தற்காலிகமாக மூடப்பட்டுள்ள வெற்றிச் செய்தியை ஊடகங்களிடம் தெரிவிக்கும் வழக்குரைஞர் ராஜு. அருகில் (இடது) வெள்ளாற்று பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் மருங்கூர் பஞ்சமூர்த்தி.

போராட்ட செய்தி தொலைக்காட்சிகளில் வெளியான காரணத்தினால் பீதியுற்ற மாவட்ட நிர்வாகம், கரையோர கிராமங்கள் அனைத்திலும் கேபிள் டிவியை துண்டித்து, மக்கள் திரள்வதைத் தடுக்க முனைந்தது. போலீசு படையை இறக்கி மிரட்டியது. அரசு தரப்பில் யாரும் பேச வரமாட்டார்கள் என்று அச்சுறுத்தியது. ''குவாரியை மூடாமல் நாம் போவதில்லை. இரவு ஆற்றிலேயே தங்குபவர்கள் எல்லாம் கை உயர்த்துங்கள்'' என்று ராஜு கூறியவுடன் எல்லோர் கைகளும் உயர்ந்தன.

இரவு ஜெனரேட்டர் மின்சாரத்தில் தொலைக்காட்சிகளில் காட்டப்படும் தமது போராட்டக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர் மக்கள். அதிகாலையில் காலைக் கடன் முடிப்பதற்காக மக்கள் கலைந்திருந்த தருணத்தில், ஆற்றின் இரு கரைகளிலும் உள்ள கிராமங்களில் போலீசைக் குவித்து ஆற்றுக்குள் செல்லவிடாமல் மக்களைத் தடுத்தது போலீசு. யாரும் அஞ்சிப் பின்வாங்குவதாக இல்லை.

வேறு வழியில்லாமல் ஆர்.டி.ஓ.வும் டி.எஸ்.பி.க்களும் பேச்சுவார்த்தைக்கு வந்தனர். ''இது பற்றி நான் பேச முடியாது. டெக்னிகல் மேட்டர்'' என்ற ஆர்.டி.ஓ.விடம், ''இந்தப் பள்ளம் 3 அடியா, 30 அடியா என்று கண்டுபிடிப்பது டெக்னிகல் மேட்டரா?'' என்று பதில் கேள்வி எழுப்பினார், வழக்குரைஞர் ராஜு. அன்றைய நாள் முழுவதும் அதிகாரிகளுடன் மக்களின் முன்னிலையில் நடைபெற்ற வாதப்பிரதிவாதங்கள், அதிகாரத் வர்க்க மழுப்பல்களையும், அதிகார தோரணையையும் கேள்விக்குள்ளாக்குவதாக அமைந்தன.

பிற்பகலில் வானம் இருண்டு மழை கொட்டத் தொடங்கியது. எனினும் கூட்டம் கலையவில்லை. மனித உரிமைப் பாதுகாப்பு மையம் கோரியிருக்கும் ஆவணங்களையும், எழுப்பியிருக்கும் கேள்விகளுக்கான பதிலையும் பொதுப்பணித்துறையிடமிருந்து பெற்றுத் தருவதாகவும், அதன் அடிப்படையில் முறைகேடு நடந்திருக்கிறதா என்பதை முடிவு செய்யலாம் என்றும், அதுவரை குவாரியை மூடுவதாகவும் ஆர்.டி.ஓ. அறிவித்தார்.

''இந்த முடிவை ஏற்கலாமா, போராட்டத்தைத் தற்காலிகமாக ஒத்தி வைக்கலாமா'' என்ற கேள்வியை ஒலி பெருக்கியில் எழுப்பி மக்களின் கருத்தைக் கூறுமாறு ராஜு கேட்டுக் கொண்டார். ஒத்தி வைக்கலாம் - கூடாது என்ற இருவிதமான கருத்துகளும் வெளிப்படையான விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டன.

''அதிகாரிகளை நம்பி நாம் போராட்டத்தை ஒத்தி வைக்கவில்லை. அவர்களது நோக்கம், மணல் கொள்ளையை நடத்துவதுதான்; அதைத் தடுப்பதே நமது பணி. இந்த இடைக்காலத் தடையைப் பயன்படுத்திக் கொண்டு வெள்ளாற்றுப் பாதுகாப்பு இயக்கத்தை மேலும் பலப்படுத்துவோம். பொக்லைன்கள் ஆற்றில் இறங்கினால் அடுத்த கணமே நாமும் இறங்குவோம். இது ஒருநாள் இரண்டு நாளில் முடியப்போகிற போராட்டம் அல்ல. நாடு முழுவதும் மக்களின் வாழ்வாதாரத்துக்கு எதிராக அரசு தொடுத்திருக்கின்ற போர் என்பதை புரிந்து கொண்டு நாம் செயல்பட வேண்டும்'' என்று ராஜு தனது இறுதி உரையை நிகழ்த்தினார். ஒரு மனதாக முடிவெடுத்த மக்கள் திரள் வெள்ளாற்றின் குறுக்கே கார்மாங்குடியை நோக்கி பேரணியாக நடக்கத்தொடங்கியது.

வெள்ளாற்றின் கரையோர கிராமத்து மக்களுக்கு அவர்களது ஆற்றல் என்ன என்பதை இப்போராட்டம் அடையாளம் காட்டியிருக்கிறது. ஜனநாயக பூர்வமான வழிமுறைகளுக்கு மக்களைப் பயிற்றுவித்திருக்கிறது. தமது அதிகாரத்தை நிலைநாட்டிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டியிருக்கிறது. மணல் குவாரியையும் தடுத்து நிறுத்தியிருக்கிறது.

● தொரட்டி

### மணல் கொள்ளை:

# ஆற்றில் இறங்கு! அதிகாரத்தைக் கையிலெடு!!

**பொருளாதார வளர்ச்சிக்காக ஆற்று மணலை அள்ளுவது என்ற அரசின் கொள்கைதான் கொள்ளையாகப் பரிணமிக்கிறது. எனவே, மனு கொடுப்பதன் மூலம் இதனைத் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதைத் தமிழக மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.**

மணற்கொள்ளை தோற்றுவிக்கும் பேரழிவு என்ன என்று தெரிந்த போதிலும், குடிநீரின்றி விவசாயமின்றி நாடே பாலைவனமாகி விடும் என்ற அபாய எச்சரிக்கை கண் முன்னே உண்மையாகி வந்தபோதிலும், எதைப்பற்றியும் அக்கறையோ கவலையோ இல்லாமல், இந்தக் கொள்ளை தொடர்கிறதே ஏன்?

கொள்ளையடிப்பதற்காகவே பதவிக்கு வருகின்ற அ.தி.மு.க., தி.மு.க. உள்ளிட்ட ஓட்டுக் கட்சி தலைவர்கள், ஆறுமுகசாமி, படிக்காசு, கே.சி.பி., பி.ஆர்.பி., வைகுந்தராசன் போன்ற கிரிமினல்கள், காசுக்காக எதையும் விற்கத் தயாராக இருக்கும் ஐ.ஏ.எஸ். முதல் வி.ஏ.ஓ. வரையிலான அதிகாரிகள், மணல் கொள்ளையர்களுக்கு அடியாள் வேலை பார்க்கும் போலீசு, பெட்டி வாங்கிக்கொண்டு தீர்ப்பு எழுதும் நீதிபதிகள் போன்ற நேர்மையற்ற பலரின் நடவடிக்கைகள்தான் மணற்கொள்ளை தொடர்வதற்குக் காரணம் என்று பலர் எண்ணுகிறார்கள்.

இதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால், தண்ணீரை விற்பதும், மணலை விற்பதும், மலைகளை விற்பதும் கண்ணில் பட்ட இயற்கை வளங்களையெல்லாம் வெட்டி விற்பதும் முன்னெந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழகத்தில் மட்டுமின்றி நாடு முழுவதும் நடப்பது ஏன்? ஏனென்றால், இந்தக் கொள்ளையைத்தான் வளர்ச்சிக்கான கொள்கை என்று மத்திய, மாநில அரசுகள் அமல் படுத்துகின்றன. எந்த விதமான ஆக்கபூர்வமான உற்பத்தி நடவடிக்கையும் இல்லாமல், இயற்கை வளங்களைக் கொள்ளையடித்து விற்பதே ஒரு தொழிலாகவும், அதுவே முன்னேற்றத்துக்கு வழியாகவும் அரசால் சித்தரிக்கப்படுகிறது.

தண்ணீரைப் பாட்டிலில் அடைத்து விற்றால் அது தொழில் வளர்ச்சி, ஏரி குளங்களை அழித்துப் பல மாடி கட்டிடங்கள் கட்டினால் அது ரியல் எஸ்டேட் வளர்ச்சி, இரும்பையும் பாக்சைட்டையும் ஏற்றுமதி செய்தால் அது அந்நியச் செலாவணி ஈட்டும் நடவடிக்கை, பொதுத்துறை நிறுவனங்களை விற்றால் அது பொருளாதார முன்னேற்றம் - இப்படிப் பன்னாட்டு கம்பெனிகள் மற்றும் டாடா, அம்பானி, அதானி போன்ற தரகு முதலாளிகளுக்கு காடுகளையும் மலைகளையும் சொந்தமாக்கி விட்டு, அவற்றை வெட்டும் ''வேலைவாய்ப்பு'' மக்களுக்குக் கிடைப்பதைக் காட்டி இதுதான் நாட்டின் வளர்ச்சி என்கின்றன மத்திய, மாநில அரசுகள்.

இந்த அநீதியை விவசாயிகளும் மீனவர்களும் பழங்குடி மக்களும் நாடு முழுவதும் எதிர்ப்பதால், மக்களைக் கட்டாயமாக அவர்களுடைய நிலங்களிலிருந்து வெளியேற்றுவதற்கு ஏதுவாக அவசரச் சட்டம் கொண்டு வந்திருக்கிறது மோடி அரசு. எனவே, நாட்டின் முன்னேற்றத்துக்காக என்ற பெயரில் ஆளும் வர்க்கம் வகுத்திருக்கின்ற இந்தக் கொள்கைதான் கொள்ளையர்களை உருவாக்குகிறது. வளர்ச்சி என்ற பெயரில் அரசு முன்தள்ளும் இந்தக் கொள்கையைத் தடுத்து நிறுத்தாதவரை இத்தகைய கொள்ளை

மணற்கொள்ளையை எதிர்த்துப் போராடியதற்காக வெட்டிக் கொல்லப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம் -மாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த சகோதரர்கள் கார்த்திக் மற்றும் ராஜேஷ். நம்பியாற்றில் நடந்துவரும் மணற்கொள்ளையை அம்பலப்படுத்திப் போராடியதால் கொல்லப்பட்ட திசையன்விளையைச் சேர்ந்த சதீஷ்குமார். (கோப்புப் படங்கள்)



யர்கள் உருவாவதைத் தடுக்கவியலாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இயற்கை வளக்கொள்ளை என்பது அரசே நடத்தும் கொள்ளை. நிலக்கரி, இரும்பு, பாக்சைட் சுரங்கங்களைகார்ப் பரேட் முதலாளிகளுக்கு எழுதிக் கொடுத்து விட்டு, மத்திய-மாநில அமைச்சர்கள் இலஞ்சம் வாங்கிக் கொள்கின்றனர். தமிழகத்தின் மணற் கொள்ளையோ நேரடியாக அரசாங்கத் தாலும், அதிகார வர்க்கத்தாலும் நடத் தப்படுகிறது.



மணல் கடத்தப்படுவதைத் தடுக்க முயன்றபொழுது, மணற் கொள்ளையர் களால் டிராக்டரை ஏற்றிக் கொல்லப் பட்ட வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த போலீசு கான்ஸ்டபிள் கனகராஜ்.

மாநில முதல்வர்தான் இந்த மணல் மாஃபியாவின் தலைவர். அதற்கு கீழே உள்ளவர்கள் ஏஜென்டுகள். அமைச்சர், எம்.எல்.ஏ., எதிர்க்கட்சிகள், கனிம வளத்துறை, பொதுப்பணித்துறை, வரு வாய்த்துறை அதிகாரிகள், போலீசு, ஊடகங்கள், சாதிக்கட்சித் தலைவர்கள், உள்ளூர் கையாட்படையினர் என இந்தக் கொள்ளைப் பணம் எல்லா மட்டங்களிலும் பாய்ந்து பரவுகிறது. பணம் வாங்க மறுப்பவர்கள், மணற்கொள்ளையை எதிர்ப்பவர் கள் மிரட்டப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள்.

ஓட்டுக்கட்சிகளைப் பொருத்தவரை, எதைச் சொல்லி யாவது ஓட்டு வாங்கி பதவியில் அமர்ந்து விட்டால், 5 ஆண்டுகளுக்கு இந்த நாடே தங்களுக்குச் சொந்தம் என்றும், எந்த பொதுச்சொத்தையும் தமது விருப்பப்படி விற்க உரிமை உண்டென்றும் அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். சட்டவிரோதமாக இதைச் செய்கிறார்கள். அல்லது இதற்குத் தோதான சட்டத்திருத்தங்களை ஐ.ஏ.எஸ் அதி காரிகள் செய்து கொடுக்கிறார்கள்.

அவர்கள் தாங்களே இயற்றிய சட்டங்களை மீறுகிறார்கள். 35 அடி தோண்டி மணலை அள்ளிவிட்டு, 3 அடிதான் தோண்டியிருக்கிறோம் என்று சாதிக்கிறார்கள். இதனைக் கேள்விக்குள்ளாக்கினால், இது மூன்றடியா முப்பதடியா என்று முடிவு செய்யும் அதிகாரம் மக்களுக்கு இல்லை, அதனை சம்மந்தப்பட்ட அதிகாரிகள்தான் முடிவு செய்ய முடி யும் என்று கூறி போலீசை வைத்து மிரட்டுகிறார்கள். சம்மந்தப்பட்ட அதி காரிகளோ, எந்த தவறும் நடக்க வில்லை என்று அறிக்கை தாக்கல் செய்கிறார்கள்.

பொதுச்சொத்தை திருடுவது மட்டுமல்ல, அதைத் தட்டிக் கேட்கும் மக்களிடம் ''அப்படித்தான் செய்வோம், உன்னால் என்ன செய்ய முடியும்?'' என்று இவர்கள் சவால் விடுகிறார்கள். கிரானைட், தாதுமணல், ஆற்றுமணல் அனைத்து விவகாரங்களிலும் நடப்பது இதுதான். இவர்களிடமே மனுக்கொடுத்து மணற் கொள்ளையைத் தடுக்கவியலுமா? ஒருக்காலும் முடியாது.

களத்தூர் கிராமப் பகுதியில் ஓடும் பாலாற்றில் நடந்துவரும் மணற்கொள்ளையைத் தடுக்கக் கோரி, வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், ஆட்சியரின் காரை முற்றுகையிட்டு முழக்கமிடும் பொதுமக்கள். (கோப்புப் படம்)



''பொதுச்சொத்துக்கு நீ உரிமையாளன் அல்ல, மக்களின் சொத்தை விற்கும் அதிகாரம் உனக்கு கிடையாது. இது மக்கள் சொத்து. சட்டம் சொல்கின்றபடியே கூட அரசும் அர சாங்கமும் இதன் காப்பாளர்களேயன்றி உரிமையாளர்கள் அல்ல. உரிமையாளர்கள் மக்கள்தான்'' என்று அரசாங்கம் மற்றும் அதிகார வர்க்கத்தின் அதிகாரத்தை நாம் கேள்விக்குள்ளாக்க வேண்டும்.

நமது நாட்டின் வளங்களைக் கொள்ளையடித்துச் சென்ற பிரிட்டிஷ் காரனிடம் கொள்ளையை நிறுத்துமாறு நாம் மனுக் கொடுக்கவில்லை. அவனை வெளி யேற்றவேண்டும் என்று விடுதலைப் போராட்டம் நடத்தினோம். இப்போது சுதந்திர நாடு என்கிறார்கள். ஜனநாயகம் என் கிறார்கள். அரசு ஊழியர்கள், அதிகாரிகள் எனப் படுவோர் மக்கள் ஊழியர்கள் என்கிறார்கள். நடப்பது என்ன? மக்களின் விருப்பத்தை நிறை வேற்றுவதற்கு மக்களின் வரிப்பணத்தில் சம் பளம் கொடுத்து வைக்கப்பட்டுள்ள வேலைக் காரர்களான இவர்கள், மக்களை ஏறி மிதிக் கிறார்கள். அதிகாரம் செய்கிறார்கள். மக்கள் சொத்தைக் கொள்ளையடிக்கிறார்கள்.



கிரானைட் குவாரிக்குத் தனது நிலத்தைத் தர மறுத்ததால், கிரானைட் கொள்ளையர்களால் தனது கை வெட்டப்பட்டதை ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயத்திடம் எடுத்துக் கூறும் இ.மலப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ராஜா.

பொதுச்சொத்துகளையும் பாதுகாப்பவர்கள் என்று தம்மை கூறிக்கொள்ளும் அமைச்சர்களும் அதிகாரிகளும்தான் அவற்றை விற்பதில் முன் நிற்கிறார்கள். கட்டிய மனைவியையே விபச்சாரத்தில் ஈடுபடச் சொல்லி கட்டாயப்படுத்தும் கணவனின் அதிகாரத்துக்கு மனைவி கட்டுப்பட்டு நடக்க முடியுமா? நாட்டின் வளங்களைக் கூட்டிக் கொடுக்கும் இவர்களின் ஆணைக்கு மக்கள் அடிபணிய முடியுமா?

மணற்கொள்ளைக்கு எதிராகப் போராடும் மக்கள் இவர்களிடம் மன்றாடுவதை தவிர வேறு வழியில்லை என்று எண்ணுகிறார்கள். எல்லோரும் திருடர்கள் என்பது உண்மைதான் என்றாலும், தப்பித்தவறி யாராவது ஒரு நேர்மையான அதிகாரி இருந்து மணல் கொள்ளையைத் தடுத்துவிட மாட்டாரா என்று ஏங்குகிறார்கள்.

அப்படி அரிதினும் அரிதாக மிச்சமிருக்கும் ஒரு சிலர்தான் லாரி ஏற்றிக் கொல்லப்படுகிறார்கள். தாசில்தார் முதல் போலீசு ஏட்டு வரை பலர் மணற் கொள்ளையர்களால் கொல்லப்படவில்லையா? நேர்மையான அதிகாரி என்று பெயர் பெற்ற சகாயம் கிரானைட் கொள்ளையை விசாரிக்கிறார். அவருடைய அறையிலேயே உளவுக்கருவியைப் பொருத்தி வேவு பார்க்கிறது அரசு. சகாயத்துக்கு அருகிலேயே நிற்கும் உளவுத்துறை அதிகாரிகளும், கனிமவளத்துறை, வருவாய்த்துறை அதிகாரிகளும் சகாயத்திடம் புகார் கொடுப்பவர்கள் பெயரைக் குறித்துக் கொண்டு பி.ஆர்.பி.க்கும் அமைச்சர்களுக்கும் உளவு சொல்கிறார்கள்.

மலைக்குன்றுகளைக் காணவில்லை, கண்மாய்கள், குளங்கள், விளைநிலங்களைக் காணவில்லை. இவற்றை காணாமல் போகச் செய்ததில் கலெக்டர் முதல் தலையாரி வரை, முதல்வர் முதல் ஊராட்சி தலைவர் வரை அனைவருக்கும் பங்கு உண்டு. சகாயத்தின் அறிக்கை இவர்களை என்ன செய்து விடும்? தாதுமணல் கொள்ளை குறித்த ககன்தீப் சிங் பேடி அறிக்கை என்ன ஆனது? மொத்த அரசுமே ஒரு கிரிமினல் கொள்ளைக் கூட்டமாக இருக்கும்போது சகாயத்தின் அறிக்கை மீது நடவடிக்கை எடுக்கப்போவது யார்? நீதிமன்றமா?

முதலில் கிரானைட், தாதுமணல், ஆற்றுமணல் கொள்ளை அனைத்தையும் விசாரிக்குமாறு கூறிய சென்னை உயர் நீதிமன்றம், கிரானைட் விவகாரத்தை மட்டும் விசாரித்தால் போதும் என்று மற்றவற்றை மர்மமான முறையில் கைவிட்டு விட்டது. அரசாங்கமோ சகாயத்துக்கு அலுவலகம் ஒதுக்கவே மறுக்கிறது. நீதிமன்றத்தின் அதிகாரத்தை எள்ளி நகையாடுகிறது. பெரும் சவடால் அடித்த நீதிமன்றமோ அரசின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பதில் பின்வாங்குகிறது.

மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் தலைமையில் கார்மாங்குடி மணல் குவாரிக்கு எதிராகப் போராடிய மக்களிடம், ''போராட்டத்தைக் கைவிடுங்கள், நீதிமன்றத்துக்கு செல்லுங்கள்'' என்று போலீசு - வருவாய்த்துறை அதிகாரிகள் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார்கள். நீதிமன்றத்தின் மீது மணல் கொள்ளையர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை. பொக்லைன் வைத்து மணல் அள்ளுவதை அனுமதிக்கும் தீர்ப்புகளை உயர்நீதி மன்றமும், உச்சநீதிமன்றமும் வழங்கியுள்ளன. தடையில்லாமல் இயற்கை வளங்களைக் கொள்ளையிடும் நோக்கத்துக்காகவே பசுமைத் தீர்ப்பாயம் என்ற சிறப்பு நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்துக்குப் போனால் என்ன நடக்கும் என்பது ம.உ.பா.மைய வழக்குரைஞர்களுக்கு தெரியுமாதலால், அதிகாரிகள் பின்னிய சதிவலையில் அவர்கள் சிக்கவில்லை.

நீதித்துறை, கட்சிகள், அதிகாரிகள் உள்ளிட்ட இந்த மொத்த அரசமைப்பும் ஆட்சி செய்யும் அருகதையை இழந்து விட்டது. இந்த அரசமைப்பு தோற்றுவிட்டது. இது ஜனநாயகம் என்பது பொய். இது ஊடகங்களும் அறிவுத்துறையினரும் திட்டமிட்டே உருவாக்கும் ஒரு மாயை. இந்த நாட்டின் விவசாயிகளுக்கும் உழைக்கும் மக்களுக்கும் இந்த அரசமைப்பு எதையும் வழங்கவில்லை என்பது மட்டுமல்ல, காடுகள் மீதும் கடலின் மீதும் நீர்நிலைகளின் மீதும் மேய்ச்சல் நிலங்களின் மீதும் அவர்களுக்கு இருந்த பாரம்பரிய உரிமையையும் சூறையாடுகிறது, திருடுகிறது. எதிர்த்துக் கேட்பவர்களைக் கொன்று போடுகிறது. இதுதான் மன்மோகன் சிங்கும், மோடியும், ஜெயலலிதாவும் முன்வைக்கின்ற வளர்ச்சிப் பாதை. மக்கள் சொத்தைக் கொள்ளையிடுவதென்பது இதன் வழிமுறை.

இப்படிப்பட்ட ஒரு அரசமைப்பை ஜனநாயகம் என்று அழைப்பது அயோக்கியத்தனமில்லையா? இந்த அமைப்பின் அதிகாரத்தின் கீழ் மக்கள் தமக்கான

நீதியைப் பெற முடியும் என்று நம்புவது மடமை யில்லையா?

மக்கள் தமது வாழ்வாதாரத்தையும், இயற்கை வளங்களையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்றாலே, தங்களது சொந்த அதிகாரத்தை நிறுவிக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆற்று மணலாகட்டும் தாது மணலாகட்டும் அவை மக்களின் உடைமைகள். ஆறுகள், மலைகள், காடுகள் உள்ளிட்ட இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை அந்தந்த பகுதிகளில் உள்ள விவசாயிகளே மேற்கொள்வது ஒன்றுதான் இந்தப் பேரழிவைப் தடுப்பதற்கான ஒரே வழி. அந்தந்த வட்டாரத்து விவசாயிகள் தமக்கான பேராயம் ஒன்றை நிறுவிக்கொண்டு தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும்.

மணல் எடுக்கலாம் என்று பொதுப்பணித்துறை ஒரு உத்தரவு பிறப்பித்தால், அதனை ரத்து செய்யுமாறு மணற் கொள்ளையர்களின் கூட்டாளிகளான அதிகாரிகளிடம் மன்றாடுவது தவறு. மனுக்கொடுப்பதும், உண்ணாவிரதம் இருப்பதும் பயனற்ற நடவடிக்கைகள். அவர்களுடைய அதிகாரத்தை கேள்விக்குள்ளாக்கும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

மணல் குவாரிக்குத் தடை விதித்து விவசாயிகள் உத்தரவு பிறப்பிக்க வேண்டும். தங்களது உத்தரவை அமல்படுத்தவும், மணல் மாஃபியாவுக்கு அவர்களுடைய மொழியிலேயே பதிலடி கொடுக்கவும் பாதுகாப்புக் குழுக்களை கிராமம் தோறும் கட்ட வேண்டும். தமிழகம் முழுவதும் மணற்கொள்ளைக்கு எதிராகப் போராடும் விவசாயிகள் தமக்குள் ஓர் ஒருங்கிணைவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இது நடக்க முடியாத கனவல்ல. மக்கள் போராட்டத்தின் வலிமையால் சுமார் ஒரு மாத காலமாக கார்மாங்குடி மணல் குவாரி மூடப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் ஒவ்வொரு மணல் குவாரியையும் நாம் மூட முடியும். இந்தப் போராட்ட முறை எந்த அளவுக்கு எல்லா இடங்களுக்கும் பரவுகிறதோ அந்த அளவுக்கு வெற்றிகளையும் ஈட்ட முடியும்.

● **சூரியன்**

# தாதுமணல் கொள்ளையன் வைகுண்டராசனைப் பாதுகாப்பது யார்?

**கா**ல்நூற்றாண்டுக்கும் மேலாக, தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களின் கடற்கரையைக் கரைத்து, இயற்கை வளத்தைச் சீரழித்த சமூக விரோதி - தாதுமணற் கொள்ளையன் வைகுண்டராஜன், அரசியல்வாதிகள், அதிகாரிகள், போலீசு உள்ளிட்ட கிரிமினல் கும்பல்களின் முழு ஆதரவோடுதான் தனது கொள்ளையைத் தொடர்ந்து வந்தான் என்பதற்கு சமீபத்திய உதாரணம்தான், தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத் தலைவராக இருந்த ஐ.ஏ.எஸ்.அதிகாரி சுப்பையாவுக்கு ஏழரை கோடி இலஞ்சம் கொடுத்து அம்பலமாகியிருப்பது.

சாதாரண குற்ற வழக்குகளில் சாமானியன் வீட்டில் புகுந்து அவனது பெண்டாட்டி, பிள்ளைகளை பிணையக் கைதிகளாகப் பிடித்து வைத்துக்கொண்டு மிரட்டும் போலீசு, வைகுண்டராஜன் விவகாரத்தில், இக்கிரிமினலைப் பாதுகாக்கும் நோக்கில் அவர் தலைமறைவாகிவிட்டார் என்று கூறி வழக்கை கிடப்பில் போட முயலுகிறது.

இதனை அம்பலப்படுத்தும் வகையிலும், ''தாதுமணற் கொள்ளையன் வைகுண்டராஜனைக் கைது செய்! அவனது சொத்துக்களை முடக்கு!'' என்ற முழக்கங்களை முன் வைத்தும் தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களில் - குறிப்பாக கடந்த ஆண்டில் தாது மணல் கொள்ளைக்கு எதிரான போராட்டத்தில் முன்னின்ற கடலோர கிராமங்களான வேம்பார், பெரியசாமிபுரம், கீழ வைப்பார், பெரியதாழை மற்றும் அணு உலைக்கு எதிராக உறுதியாகப் போராடிவரும் இடிந்தகரை, கூடங்குளம் ஆகிய பகுதிகளில் விரிவான அளவில் பிரச்சார இயக்கத்தை மனித உரிமைப் பாதுகாப்பு மையம் நடத்தியது. இதன் தொடர்ச்சியாக, கடந்த நவம்பர் 29 அன்று தூத்துக்குடி பழைய மாநகராட்சி அலுவலகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.




வைகுண்டராஜனை எதிர்த்துப் பேசினால் உயிருக்கு உத்திரவாதமில்லை என்றளவுக்கு அச்சத்தின் பிடியில் இருத்தப்பட்டிருக்கும் கடற்கரையோர மீனவ கிராமங்கள் மற்றும் இடிந்தகரை, கூடங்குளத்தைச் சேர்ந்த பெண்கள், குழந்தைகளின் திரளானப் பங்கேற்புடன் நடைபெற்றது இவ்வார்ப்பாட்டம்.

● பு.ஜ.செய்தியாளர்

## மறுகாலனியத் தாக்குதலும் இந்துவெறியர்களின் கொட்டங்களும்

# ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்

**இந்து மதவெறிக் கும்பல்களின் அடாவடித்தனங்களுக்கும் மோடிக்கும் தொடர்பில்லை எனப் பார்ப்பனக் கும்பல் கூறிவருவது கடைந்தெடுத்த மோசடியாகும்.**

'**வ**ளர்ச்சி', 'முன்னேற்றம்' என்று கூறிக் கொண்டு நாட்டின் மூலவளங்களைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்ப்பது, கூடுதலாக 12 அணு உலைகளை நிறுவி மக்களை நிரந்தர ஆபத்தில் வைப்பது, ஏழை மக்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் உள்ளிட்ட அனைத்து மானியங்களையும் வெட்டி வயிற்றிலடிப்பது, காப்பீடு துறையில் அந்நிய முதலீடு, நிலக்கரி வயல் ஒதுக்கீடு தொடர்பான மசோதாக்களைக் கொல்லைப்புறமாக அவசரச் சட்டத்தின் மூலம் நிறைவேற்றியிருப்பது - என நாட்டின் மீதும் மக்களின் மீதும் பொருளாதார ரீதியாகப் பயங்கரவாதத் தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிடும் அதே வேளையில், இந்துத்துவ செயல்திட்டத்தைத் தீவிரமாக்கி, பார்ப்பனப் பாசிச மேலாதிக்கத்தை நிலைநாட்ட வெறிபிடித்து அலைகிறது மோடி அரசு.

இந்தித் திணிப்பு, சமஸ்கிருதத் திணிப்பு, குரு உத்சவ், புராணக் குப்பைகளைப் பாடத் திட்டத்தில் சேர்ப்பது, பகவத் கீதையைத் தேசிய நூலாக அறிவிக்கத் துடிப்பது, சவப்பெட்டி ஊழல் புகழ் முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் பிறந்தநாள் என்பதால், கிறிஸ்துமஸ் தினத்தை 'நல்லாட்சி'த் தினமாகக் கொண்டாட வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பது, கிறிஸ்துமஸ் தினத்தன்று நவோதயா மற்றும் சி.பி.எஸ்.இ. பள்ளிகள் விடுமுறையின்றி இயக்கப்பட்டு, அன்று மாணவர்களுக்கு வாஜ்பாய் குறித்த கட்டுரைப் போட்டிகளை நடத்த வேண்டும் என்று மைய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் உத்தரவு பிறப்பித்திருப்பது என்பதோடு, தாய் மதத்துக்குத் திரும்புதல் என்ற பெயரில் கட்டாய மத மாற்றத்தையும் ஆளும் இந்துவெறி பாசிச கும்பல் அரங்கேற்றி வருகிறது. சிறுபான்மை மக்களுக்கு எதிராக நஞ்சைக் கக்குவதோடு, தொடர்ந்து தாக்குதல்களையும் நடத்திவருகிறது.

இந்து மதத்துக்குச் சிறுபான்மை மக்களைச் சேர்க்கும் ''கர் வாபஸி'' எனும் நிகழ்ச்சிகளை நடத்தி ஆக்ராவில் ஏறத்தாழ 200 ஏழை முஸ்லிம்களை ஆர்.எஸ்.எஸ். இன் அடியாள் படையான பஜ்ரங்தளம் கட்டாய மதமாற்றம் செய்துள்ளது. ரேசன் கார்டு, ஆதார் அட்டை, உதவித் தொகை, போலீசுத் தொல்லையிலிருந்து பாதுகாப்பு என ஒருபுறம் ஆசைகாட்டியும், மறுபுறம் குடியிருக்கும் இடத்தைவிட்டுக் காலி செய்து விடுவோம் என மிரட்டியும் நடத்தப்பட்ட கட்டாய மதமாற்றம் இது. இது போல குஜராத்தின் வல்சாத் பகுதியிலும், கேரளத்தின் ஆலப்புழையிலும் கட்டாய மதமாற்ற நிகழ்ச்சிகளை விசுவ இந்து பரிசத் நடத்தியுள்ளது. அலிகாரிலுள்ள கிறித்துவர்களை கிறிஸ்துமஸ் தினத்தில் மதமாற்றம் செய்யப் போவதாக தர்ம ஜக்ரான் மன்ஞ் எனும் இந்து வெறி அமைப்பும், அதேநாளில் ஏறத்தாழ 5000 கிறித்துவர்களையும் முஸ்லிம்களையும் மதமாற்றம் செய்வோம் என்று பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினரான ரவுடி சாமியார் ஆதித்யநாத், ஆர்.எஸ்.எஸ். தலைவர்களுள் ஒருவரான ராஜேஸ்வர் சிங் ஆகியோர் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

ஆசை காட்டியும் அச்சுறுத்தியும் ஏழை முஸ்லிம்களைக் கட்டாய மதமாற்றம் செய்யும் இந்துவெறி குண்டர்களின் கொட்டம்.



கடந்த நவம்பர் இறுதியில் பிரதமர் மோடி நாகாலாந்துக்குப் பயணம் செய்தபோது, நாடெங்கும் தொடரும் கிறித்துவர் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்துமாறு கிறித்துவ சபைகளின் சார்பில் மனு அளிக்கப்பட்டது. அடுத்த நாளே டெல்லியிலுள்ள செயிண்ட் செபாஸ்டியன் தேவாலயம் தாக்கப்பட்டுத் தீயிடப்பட்டுள்ளது. டெல்லி மட்டுமின்றி, ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, சட்டிஸ்கர், உ.பி., தமிழ்நாடு, ம.பி., பஞ்சாப் முதலான மாநிலங்களிலும் கிறித்துவ தேவாலயங்கள் தாக்கப்பட்டுள்ளன. சட்டிஸ்கரில் கிறித்துவ குடும்பங்களுக்கு ரேஷனில் உணவுப் பொருட்கள் வழங்கப்படாமல் இரு மாதங்களுக்கு இழுத்தடிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துமஸ் பாடல்களைப் பாடிப் பிரச்சாரம் செய்வதற்குப் பல கிராமங்களில் தடை விதிக்கப்பட்டுள்ளதோடு, கிறித்துவர்கள் இக்கிராமங்களில் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. குஜராத்தில் 100 கிறித்துவர்களை விசுவ இந்து பரிசத் கட்டாய மதமாற்றம் செய்துள்ளது.



பார்ப்பன கும்பலின் நிகழ்ச்சிநிரலின்படி, இந்துவெறி குண்டர்களால் தாக்கப்பட்டு தீயிடப்பட்டுள்ள டெல்லி செயிண்ட் செபாஸ்டியன் தேவாலயம்.

பாபர் மசூதி இடிப்பு தொடர்பாக அமைக்கப்பட்ட லிபரான் கமிசனின் குற்றவாளிகள் பட்டியலில் இருப்பவரான இந்துவெறி வாஜ்பாயிக்கும், இந்து மகாசபை நிறுவனர் மாளவியாவுக்கும் மோடி அரசு பாரத ரத்னா விருது வழங்குகிறது. தமிழகத்தில் பெருமாள் முருகன் எழுதிய ''மாதொரு பாகன்'' நாவலை இந்துவெறிக் கும்பல் எரித்து கண்டனம் தெரிவித்துக் கொட்டமடிக்கிறது. அமீர்கானின் ''பீகே'' படத்தைத் தடைசெய்ய வேண்டுமென இன்னுமொரு இந்துத்துவ கும்பல் புறப்பட்டுள்ளது. சனாதன தர்மத்தை நிலைநாட்டவே காந்தியைச் சுட்டுக் கொன்ற இந்துவெறியன் கோட்சேவுக்கு தேசபக்தர் என்று முலாம் பூசி, உ.பி.யின் மீரட் நகரில் கோட்சேவுக்குச்சிலை அமைக்க இந்துவெறி கும்பலால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. கோட்சே சிலைகளைத் தமிழகத்தின் மாவட்டத் தலைநகரங்களில் அமைக்கப் போவதாக தமிழக இந்து மகாசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. கோட்சேவுக்குச் சிலை வைத்தால் என்ன தவறு என்று திமிராகக் கேட்கிறார், இந்துவெறி அர்ஜுன் சம்பத். பெரியாரைச் செருப்பால் அடிப்போம் என்று சொன்ன இந்துவெறி ஹெச்.ராஜா பெரியாரும் அண்ணாவும் தமிழகத்தில் பிறந்தது தவறு என்று மீண்டும் திமிருடன் கொக்கரிக்கிறார். பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினரான இந்துவெறி சாத்வி நிரஞ்சன் ஜோதி, ராமனை ஏற்காதவர்கள் முறைதவறிப் பிறந்தவர்கள் என்று திமிராகப் பேசியுள்ளார். அண்மையில் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் விழா ஒன்றில் பேசிய சு.சாமி, பள்ளி-கல்லூரி வரலாற்றுப் பாடங்களில் அக்பர், பாபர் போன்ற மொகலாய மன்னர்களின் பாடங்களை நீக்கிவிட்டு இந்து மன்னர்கள் பற்றி அதிகம் கூறப்பட வேண்டும், மசூதிகளை இடித்துவிட்டு அங்கு இந்து கோயில்களைக் கட்ட வேண்டும். பள்ளிகளில் சமஸ்கிருதம் கட்டாயப் பாடமாக்க வேண்டும், மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று நஞ்சைக் கக்கியுள்ளார்.

''ராமனை ஏற்காதவர்கள் முறைதவறிப் பிறந்தவர்கள்'' என்று திமிராகப் பேசும் நாடாளுமன்ற உறுப்பினரான இந்துவெறி சாத்வி நிரஞ்சன் ஜோதி.



இப்படி அடுத்தடுத்து அதிரடியான நடவடிக்கைகளையும், திமிர்ப் பேச்சுக்களையும் இந்துத்துவப் பரிவாரங்கள் ஏதோ உணர்ச்சி வேகத்தில் செய்வதாகக் கருத முடியாது. இவைதான் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன கும்பலின் நிகழ்ச்சிநிரலாக உள்ள செயல் திட்டங்கள். மேலும், இது மறுகாலனியத் தாக்குதலைத் திசைதிருப்புவதற்கான கருவியாகவும் பயன்படுகிறது. ஆனால், இந்துத்துவ நிகழ்ச்சிநிரலை களத்தில் நின்று முறியடிக்கும் நோக்கம் எதுவும் எதிர்க்கட்சிகளிடம் இல்லை.

இந்துவெறி சாத்வி நிரஞ்சன் ஜோதியின் திமிர்ப் பேச்சையும், மதமாற்ற நடவடிக்கைகளையும் எதிர்த்து, எதிர்க்கட்சிகள் சாத்வியைப் பதவி நீக்கக் கோரி முழக்கமிட்டு நாடாளுமன்றத்தை முடக்கின. பிரதமர் பதிலளிக்க வேண்டுமென்று வலியுறுத்தின. ஆனால், பிரதமர்

மோடியோ நாடாளுமன்றத்துக்கு வருவதேயில்லை; வந்தாலும் வாயைத் திறப்பதுமில்லை. மத மாற்ற நிகழ்ச்சிகளில் மைய அரசுக்கோ பா.ஜ.க.வுக்கோ எவ்வித தொடர்பும் இல்லை என்று ஒருபுறம் மறுத்துவிட்டு, மறுபுறம், கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம் கொண்டு வரத் தயார், எதிர்க்கட்சிகள் ஆதரிக்கத்தயாரா என்று நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் வெங்கையா நாயுடு மடக்கவும், எதிர்க்கட்சிகள் அடங்கிப்போய்விட்டன.

இப்படித்தான், இதற்கு முன்பு காஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்து அளிக்கும் சட்டப்பிரிவு 370-ஐ நீக்க வேண்டுமென்ற பா.ஜ.க.வின் கொள்கை மீது விவாதங்கள்கிளப்பப் பட்டன. இத்தகைய இந்துத்துவ செயல்திட்டங்களை ஆளும் இந்துவெறி பாசிஸ்டுகள் அடுத்தடுத்து கொளுத்திப் போடுவதும், அதை வைத்து விவாதங் களைத்தூண்டி நடத்துவதும், நாட்டின்கவனத்தை இதை நோக்கி இழுப்பதும், பிரதமர் கருத்து கூற வேண்டும் என எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் குரலெழுப்புவதும், தமது கையாலாகாத்தனத்தை மூடிமறைக்கும் தந்திரத்துடன் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் பா.ஜ.க.வை முடக்கிவிட்டதைப் போன்ற தோற்றத்தை எதிர்க்கட்சிகள் ஏற்படுத்துவதும் நடக்கிறது. பிறகு புதிய தொரு இந்துவெறி நடவடிக்கையை ஆளுங்கும்பல் முன்தள்ளுவதும், அதன் பிறகு அதன் மீது விவாதம், பிரதமர் கருத்து கூறவேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோருவதும் எனத்திருகு சுழல் போல இவை தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இருப்பினும் மோடி யோக்கியவானைப் போலவும், 'வளர்ச்சி'யைச்சாதிக்க உழைத்து வருவதாகவும், சாத்வி போன்றவர்கள்தான் இந்துவெறியோடு அலைவதாகவும் ஒரு கருத்துப் படிமம் திட்டமிட்டே உருவாக்கப்படுகிறது. இப்படித்தான் இந்துவெறி வாஜ்பாயி மிதவாதி போலவும், அத்வானியைத்தீவிரவாதி போலவும், பின்னர் அத்வானி மிதவாதி போலவும் மோடியைத் தீவிரவாதி போலவும் ஒரு தோற்றத்தை ஊடகங்கள் ஏற்படுத்தின. இப்போது இந்துவெறி பயங்கரவாதி மோடியை மிதவாதியாக்கி அமித்ஷாவை அரசியல் சாணக்கியராக்கி, பிற இந்துவெறியர்கள்தான் தீவிரவாதிகள் போலவும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்றன.

''பிரதமர் நரேந்திர மோடி, பா.ஜ.க.வின் துணைப் பரிவாரங்களாகத் தம்மைக் கருதிக் கொள்ளும் சில அமைப்புகளுக்கு மூக்கணாங்கயிறு கட்டி, தார்க்குச்சி போடும் வேளைவந்துவிட்டது. உடனே இதைச்செய்யாவிட்டால், கட்சிக்கும் ஆட்சிக்கும் அயல் எதிரிகளே தேவையில்லை. இந்த அனுகூல சத்ருக்களே போதும்''



''பெரியாரைச் செருப்பால் அடிப்போம்! பெரியாரும் அண்ணாவும் தமிழகத்தில் பிறந்தது தவறு!'' என்று திமிருடன் கொக்கரிக்கும் இந்துவெறியன் ஹெச்.ராஜா.

என்று இதையே ''துக்ளக்'' சோ தந்திரமாகக் கூறுகிறார். (துக்ளக் 10.12,2014) ''இதுவா நீங்கள் கூறிய வளர்ச்சி?'' என்று புலம்புகிறது ஆனந்த விகடன். கருணாநிதியோ, ''மதச்சார்பற்ற அரசாகத் தொடர்ந்து நடைபெற இனியாவது பிரதமர் மோடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தி.மு.க. சார்பில் வலியுறுத்துவதாக'' மொன்னையாக அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார். மதச் சார்பின்மை பேசும் தி இந்து, எக்னாமிக் அண்டு பொலிடிகல் வீக்லி முதலானவை கூட, பிரதமர் தனது கட்சிக்குக் கட்டுப்பட்டவராக இருக்கலாம்; ஆனால், அவர் நாட்டின் அரசுக்குத் தலைமைப் பொறுப்பில் உள்ளவர் என்பதால், அவர் முன்வந்து இந்துத்துவ நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டும் என்று திருடனிடமே வேண்டுகோள் விடுக்கும் நிலைக்கு தரம் தாழ்ந்து கிடக்கின்றன. மோடியைப் பிரித்து 'வளர்ச்சி'யை முன்னெடுத்துச் செல்லுமாறு கோருவதன் மூலம் இரட்டை மோசடிகளை - மறுகாலனியத் தாக்குதலை 'வளர்ச்சி' என்று நியாயப் படுத்தும் மோசடியையும், இந்துவெறியர்களை மோடி அடக்கி வைப்பார் என்று நம்பவைக்கும் மோசடியையும் இவர்கள் திட்டமிட்டே செய்து வருகின்றனர்.

இதைச்சாதகமாக்கிக் கொண்டு, மறுகாலனியத்தாக்குதல்களால் ஆத்திரம் கொள்ளும் மக்களின் வெறுப்பை இந்துத்துவ திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு எதிரான கருத்து மோதலாக மடைமாற்றிவிடுவதில் மோடி கும்பல் குறியாக இருக்கிறது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பதைப் போல, ஒரே நேரத்தில் இரண்டு நோக்கங்களையும் மோடி கும்பல் நிறைவேற்றிக் கொள்கிறது. காவிப் பாசிசமும் கார்ப்பரேட் பாசிசமும் மோடியின் இரண்டு கண்களாக உள்ளன. ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல கார்ப்பரேட் பாசிசமும் காவிப் பாசிசமும் இணைந்துள்ளன. மறுகாலனியாதிக்க கொள்ளையைத் தீவிரமாகச் செயல்படுத்திவரும் அதேவேளையில், இந்துவெறியர்களின் நடவடிக்கைகளை மட்டும் விவாதப் பொருளாக்கி, இந்த விவகாரத்தைத் திட்டமிட்டே திசைதிருப்பும் மோடி கும்பலின் சூழ்ச்சிக்கு எதிர்க்கட்சிகள் தெரிந்தே துணை போகின்றன. இதைச் சாதகமாக்கிக் கொண்டு, நாங்கள் ஆட்சியதிகாரத்தில் இருக்கிறோம், என்ன வேண்டுமானாலும் செய்வோம் என்று காவிக்கூட்டம் திமிருடன் செயல்படுகிறது. இந்துத்துவப் பரிவாரங்கள் மதவெறியைக் கைவிடப்போவதுமில்லை, முதலாளித்துவ ஊடகங்கள் வேண்டுகோள் விடுப்பதைப் போல 'வளர்ச்சி'யைச்சாதிக்கும் பொருட்டு அவர்களை மோடி அரசு தடுக்கப் போவதுமில்லை என்பதேயே தீவிரமாகிவரும் மறுகாலனியத் தாக்குதலும் காவிக் கூட்டத்தின் கொட்டங்களும் நிரூபிக்கின்றன.

● குமார்

### ஜெயா பிணை மனு:

# உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் அதீத அக்கறை - அவசரம்!

**பிரம்மஸ்ரீ கிரிமினல் குற்றவாளி மீதான வழக்கு என்பதால், அதனை விரைந்து முடிக்க சட்டத்திற்குப் புறம்பான சலுகைகள் உச்ச நீதிமன்றத்தால் அளிக்கப்பட்டுள்ளன.**

ஜெயலலிதா-சசிகலா கும்பலுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கின் போக்கும் முடிவும் எத்தகையதாக இருக்கும் என்பதை, அக்கும்பலின் பிணை கோரும் மனுவைப் பல சட்ட விதிகளுக்கும் மரபுகளுக்கும் இயற்கை நீதிக்கும் எதிராக, மாறாகக் கையாண்டு, உச்ச நீதிமன்றம் அளித்திருக்கும் ஆணைகள் வெளிப் படுத்தியிருக்கின்றன. சொத்துக் குவிப்புக்காக ஜெயலலிதா- சசிகலா கும்பல் புரிந்துள்ள குற்றங்களுக்கு இணையான அதிகார முறைகேடு குற்றங்களை உச்ச நீதிமன்றம் புரிந்துள்ளது. இந்தக் குற்றங்களே தனியே விசாரித்துத் தண்டிக்கத்தக்கன.

ஆனால், உச்ச நீதி, உயர்நீதி மன்ற நீதிபதிகள் அவ்வாறான தான் தோன்றித் தனமான தீர்ப்புகள் வழங்குவதைத் தடுப்பதற்கோ, வளையும் செங்கோலை நேராக்கு வதற்கோ நீதியான வழி - நேரான வழியேதும் கிடையாது. மீண்டும் அவர்களிடமே மறு சீராய்வு மனுப்போட்டு ஒருமுறை மன்றாடலாம்! மற்றபடி, அவ்வாறான தவறு செய்யும் ''நீதியரசர் களை''க் கேள்விக் குள்ளாக்குவதற்கோ, விசாரிப்பதற்கோ, தவறு செய்தார்கள் என்று நிரூபிக்கப்பட்டால் நடவடிக்கை மேற்கொள்வதற்கோ வழியேதும் கிடையாது!

''நீதியரசர்கள்'' விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் வழக்குகளின் தீர்ப்பு களில் மட்டுமல்ல, தாங்களே இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், பாலியல் குற்றங்களில் சிக்கினால்கூட இரகசிய விசாரணை மற்றும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவிருந்தால் தான் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால், நீதிபதிகளோ சட்டப் பாதுகாப்பு வளையத்துக்குள் ஒளிந்து கொண்டும் அவர்களுக்குள் கூட்டுச்சேர்ந்து கொண்டும் தப்பித்துக் கொள்கிறார்கள். செல்வாக்கு மிக்கவர்களின் தாக்குதல் களில் இருந்து ''நீதியரசர்களை''க் காப்பதன் மூலம் நீதிவழுவாது அவர்கள் செயல்படவேண்டும்; அதனால், நடுநிலையான தீர்ப்பு கள் வரவேண்டும்; ஒருபக்க சார்பாக தீர்ப்புகள் வந்துவிடக்கூடாது என்பதற்கான ஏற்பாடுதான் இந்த அரசியல் சட்டரீதியான பாது காப்பு என்று சொல்லப்படுகிறது.

ஆனால், இந்த தனிச்சிறப்பான, அரசியல் சட்ட ரீதியான பாது காப்பிருக்கும் துணிச்சலில்தான் உச்ச நீதி மன்ற நீதிபதிகள் ஜெயலலிதா - சசிகலா கும்பலின் பிணை கோரும் வழக்கில் பல சட்ட விதிகளுக்கும் மரபுகளுக்கும் இயற்கை நீதிக்கும் எதிராக, மாறாகக் கையாண்டு நடந்து கொண்டுள்ளார்கள். இவை கண்டு நாட்டின் சட்ட-நீதி வல்லுநர்கள் திக்பிரமை பிடித்த வர்களைப் போல வாயடைத்துக் கிடக் கிறார்கள். உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர் களில் சிலர் சொல்லியிருக்கிறார்கள்: ''என்ன நடக்கிறதென்றே தெரியவில்லை. பிணை கோரும் குற்றஞ்சாட்டப்பட்டவர் கள் தரப்பு வழக்கறிஞர்கள் மட்டுமே வாதங் களை வைத்தார்கள். எதிர்த்தரப்பின் வாதங்கள் கேட்கப்படவே இல்லை.''

எதிர்த்தரப்பு வாதங்கள் எதையுமே கேட்காமல், குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயா -சசி தரப்பு வழக்கறிஞர்களோடு வியாபார பேரக் கலந்தாலோசனையைப் போல பேசி முடித்து உச்சநீதிமன்ற அமர்வு நீதிபதிகள் தீர்ப்புகளை அறிவித்து விட்டார்கள்.

நீதிபதி குன்ஹாவின் தீர்ப்பை நிரா கரிப்பது உட்பட பல்வேறு கோரிக்கை களைக் கர்நாடகா உயர்நீதி மன்றத்தில் பிணை கோரிய மனுவில் முன்வைத்

இயற்கை நீதிக்கு முரணாக ஜெயா-சசி கும்பலுக்குப் பிணை வழங்கியிருப்பதோடு, அவ்வழக்கை விரைந்து முடிப்பதற்குமான ஏற்பாடுகளை செய்து கொடுத்திருக்கும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி எச்.எல்.தத்து.



திருந்தது, ஜெயா-சசி கும்பல். அதனாலேயே பிணை கிடைக்கவில்லை என்று அக்கும்பல் தனது தரப்பு வழக்கறிஞர்கள் மீது சீறிக்கொண்டிருந்த நிலையில், பிணை தவிர வேறு கோரிக்கைகளை முன்வைக்க அஞ்சிக் கொண்டிருந்தது. அதனாலேயே உச்ச நீதிமன்றத்திலேயே மிக அதிக கட்டணம் வசூலிக்கும் வழக்கறிஞர் ஃபாலி நாரிமனை அமர்த்திக்கொண்டது. அவரோ தன் தரப்பினர், ''வீட்டுக் காவலில் (வீட்டுச் சிறையில்) இருக்கக் கூடவும் தயார்; பிணை கிடைத்தால் போதும்'' என்று தாழ்பணிந்து மன்றாடினார்.

ஆனால், அவரே எதிர்பாராமல் ''ஐயய்யோ! அதெல்லாம் வேண்டாம்'' என்று பதறிய தலைமை நீதிபதி எச்.எல். தத்துவோ பிணை மனுவில் குற்றவாளிகள் தரப்பில் முன்வைக்காத கோரிக்கைகளையும் வாரி வழங்க தயாராகவிருக்கக் கண்டார். அதேசமயம், இவ்வழக்கை விசாரிக்கும் உச்ச நீதிமன்ற அமர்வு கறாராக இருப்பதைப்போலவும், குற்றவாளிகள் தரப்பு பணிவுடன் மன்றாடுவதைப் போலவும் வழமையான நீதிமன்ற நாடகங்களில் ஒன்றை அரங்கேற்றினார்கள்.


''ஏற்கெனவே, இந்த சொத்துக் குவிப்பு வழக்கு 18 ஆண்டுகள் இழுத்தடிக்கப்பட்டுவிட்டது. இனிமேலும் சகித்துக்கொள்ள முடியாது. இனியும் தாமதிக்காமல் மேல்முறையீடு செய்துவிடவேண்டும். அதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும்'' எனக் குரலில் மட்டும் ''கறார்'' காட்டிவிட்டு, குற்றவாளிகள் தரப்புக் கோரியதைவிட அதிகமாகவே அவகாசம் கொடுத்தார், தலைமை நீதிபதி. அதைப் பார்த்தவர்கள் ஏதோ சலுகை காட்டிவிட்டதாக எண்ணக் கூடாது என்பதற்காகவே, திடீரென்று குரலை உயர்த்தி, மேலும் ''கறார்'' காட்டி, ''மேல்முறையீடு செய்வதில் மேலும் ஒருநாள்கூடத் தாமதம் செய்யக் கூடாது. தாமதம் செய்தால் பிணை உத்திரவை ரத்து செய்துவிடுவோம்'' என்று எச்சரிப்பதுபோல நாடகமாடினார்.

உண்மையில், சிவாஜி கணேசன் ''படவா ராஸ்கல்'' என்று செல்லமாகத் திட்டிக் கொஞ்சுவதை எத்தனை சினிமாக்களில் பார்த்திருக்கிறோம்! அதைப்போலத் தான் இதுவும்! தண்டிக்கப்படுவோம் என்றஞ்சும் குற்றவாளிகள் வழக்கு விசாரணையும் தீர்ப்பும் வருவதைத் தள்ளிப்போடும், தாமதப்படுத்தும் உள்நோக்கத்தோடு வழக்கைத் இழுத்தடிப்பார்கள். அந்த வகையில் குற்றவாளி ஜெயா 185 வாய்தாக்கள் வாங்கி, வாய்தா ராணி என்று பெயர் வாங்கியவர். ஜெயா போன்ற கடுங்குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட பிறகு முடிந்தவரை சிறைத் தண்டணையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக மேல்முறையீட்டை விரைந்து முடித்து வெளியில் வர எத்தணிப்பார்கள். அத்தகைய எத்தணிப்பில் உள்ள ஜெயா-சசி கும்பலுக்குச் சாதகமாக நடந்து கொண்டே, கண்டிப்பு - கறார் வேசங்கட்டிக் கொண்டு உச்ச நீதிமன்றம் ஆடிய அவசர அப்பட்டமான அநீதி ஆட்டம் கேலிக்கூத்தாகவே அமைந்தது.

ஜெயலலிதா-சசிகலா கும்பல் சிறையிலடைக்கப்பட்ட மறுநிமிடத்திலிருந்து அக்கும்பலின் அடிமை விசுவாசிகள் போட்டிபோட்டுக் கொண்டு கட்டவிழ்த்து விட்ட அராஜகம்; தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு ஏற்பட்டுவிட்ட ''அவப்பெயரையும் களங்கத்தையும்'' மூடிமறைத்து, நீதியான - சட்டப்படியான தீர்ப்பு வழங்கிய நீதிபதியை இழிவுபடுத்தும் செயலுக்கு அரசமைப்பு முழுவதையும் கேடாகப் பயன்படுத்தியது; பொதுச் சொத்துக்களைச் சூறையாடி பொதுமக்களிடையே பயபீதியையும் பாதுகாப்பற்ற சூழலையும் ஏற்படுத்தியது; இவற்றுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட எல்லா பொதுநல முறையீடுகளையும் தட்டிக்கழிப்பது, ஒத்திவைப்பதன் மூலம் மேற்படிக் குற்றங்களுக்கு நீதித்துறையே உடந்தையாக மாறிப்போனது. இவற்றுக்காக தானே முன்வந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய உச்ச நீதிமன்றம், கண்டுகொள்ளாது கண்மூடிக்கொண்டது. மாறாக, தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளைப் பிணையில் விடுவதில்தான் அவசரமும் அக்கறையும் காட்டியது.

ஜெயா-சசி கும்பலுக்கு எதிராக டிராஃபிக் ராமசாமி தொடுத்த பல பொதுநல வழக்குகள் மீது உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு மாறாக, தட்டிக் கழிப்பது, தள்ளிப் போடுவது, தகுந்த பதிலளிக்காமல் மழுப்புவது போன்ற உத்திகளைக் கடைப்பிடித்து குற்றவாளிகளைக் காப்பதிலேயே உயர் நீதிமன்றம் குறியாகச் செயல்பட்டது. இந்த வகையில் ஜெயா-சசி கும்பலின் பிணைகோரும் வழக்கில் பெயருக்குத் தகுந்தாற் போன்று உச்சத்துக்கே போயிருக்கிறது, உச்சநீதி மன்றம்.

நீதிமன்ற நடத்தை நெறிமுறைகளுக்கு எதிராக ஜெயாவின் சார்பாக உச்சநீதி மன்றத்தில் வாதாடிய வழக்குரைஞர் ஃபாலி நாரிமன்.



சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு விசாரணையில் இருக்கும் ஜெயலலிதா முதல்வராகவே இருக்கக்கூடாது; தண்டிக்கப்பட்ட குற்றவாளியின் தலைமையிலான கட்சி ஆட்சி நடத்தக் கூடாது; தன் மகன் ரோஹிண்டன் நாரிமன் நீதிபதியாக இருக்கும் நிலையில், தந்தையாகிய ஃபாலி நாரிமன் ஜெயா-சசி கும்பலின் சார்பாக உச்சநீதி மன்றத்தில் பிணை கோரும் வழக்கில் வாதாடக்கூடாது (அலகாபாத் நீதிமன்றத்தில் உறவினர்களே நீதிபதிகளாகவும் வழக்கறிஞர்களாவும் பணியாற்றுவது தர்மம் ஆகாதென்று இதே உச்சநீதி மன்றம் கண்டித்திருக்கிறது!) தகுந்த விளக்கமில்லாமல் ஜெயா-சசி கும்பலுக்கு பிணை வழங்

கியது தவறு, அதை ரத்துசெய்ய வேண்டும்; ஜெயா-சசி கும்பலுக்குப் பிணை வழங்கியதில் ஆயிரம் கோடி ஊழல் பேரம் பேசி இருநூறு கோடி ரூபாய் கைமாறி இருப்பதாகப் புகார்கூறப்படுகிறது, அதை விசாரிக்கவேண்டும்; இக்குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள தலைமை நீதிபதி எச்.எல்.தத்து பிணைமனுவை விசாரிக்கக்கூடாது - என்பன போன்று எழுப்பப்பட்ட கேள்விகள் அனைத்தும் சதித்தனமாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

நீதிபதி எச்.எல்.தத்து முகத்துக்கு நேராகவே ஊழல் குற்றச்சாட்டு குறித்து விசாரணை கோரிய போதும் ‘‘அந்த ஆயிரம் கோடி ரூபாய் விவகாரம் தானே, கோர்ட் அதைப் பார்த்துக்கொள்ளும்’’ என அலட்சியமாகவும், திமிராகவும் கூறித் தள்ளுபடி செய்துவிட்டார். ஆனால், நீதிபதி எச்.எல்.தத்து மீதான ஊழல் குற்றச்சாட்டு வெறும் ஆதாரமற்ற பழியோ, அவதூறோ, வதந்தியோ அல்ல; அடிப்படை முகாந்திரம் உள்ள உண்மைதான் என்பதை அவரது அன்றைய நடவடிக்கைகளே காட்டிக்கொடுத்துவிட்டன. ஜெயா-சசி கும்பலின் பிணைகோரும் மனுமட்டுதான் நீதிபதி எச்.எல்.தத்து தலைமையிலான அமர்வு முன்பு வந்திருக்கிறது. பிணை வழங்கியதோடு அதன் பணி முடிந்துவிட்டது. வழக்கை கர்நாடகா உயர் நீதி மன்றத்திடம் ஒப்படைத்து விடவேண்டும். அங்கு அதன் அதிகாரத்தின்படியும் அணுகுமுறை - முன்னுரிமைப்படியும்தான் மேற்கொண்டு நடத்தப்பட வேண்டும். தண்டனை உறுதிசெய்யப்படுமானால்,




ஜெயா - சசி கும்பலுக்கு வழங்கப்பட்டுள்ள பிணையை எதிர்த்து உச்சநீதி மன்றம் மற்றும் அரசுத் தலைவரிடம் முறையீடு செய்துள்ள டிராபிக் ராமசாமி.

ஜெயா-சசி கும்பல் மேல் முறையீட்டுக்குத் தன்னிடம் வந்தால்மட்டும், அதன் பிறகுதான் உச்ச நீதிமன்றம் மீண்டும் தலையிட முடியும். ஏற்கெனவே பல வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் முறைப்படியும் வரிசைக் கிரமப்படியும் அவ்வழக்குகள் நடந்தால், ஜெயா-சசி கும்பலின் மேல்முறையீடு உச்ச நீதிமன்றம் வருவதற்குள் இந்த எச்.எல்.தத்து ஓய்வுபெற்றுவிடுவார்.

இதைக் கணக்கிட்டுதான் தான் ஓய்வுபெறும் அடுத்த ஆண்டுக்குள் இந்த வழக்கின் மேல்முறையீட்டை தானே முடித்துவைக்க வேண்டும் என்று எச்.எல்.தத்து துடிப்பதாகத் தெரிகிறது. அதனால், இந்த அமர்வு பிணை கோரும் வழக்கை முடிக்காமல் தன்னிடமே வைத்துக் கொண்டுள்ளது. வழக்கை நடத்த வேண்டிய கர்நாடகா உயர் நீதிமன்றத்தின் வசதி - வாய்ப்புகளைக் கலந்தாலோசிக்காமலேயே, தன்னிச்சையாகக் கால அட்டவணையை குற்றவாளிகளுக்கு சாதகமாகத் தானே அவசர அவசரமாக வரையறுக்கிறது. எதிர்த் தரப்புக்கு ஒரு மாதம், அரசுத் தரப்புக்கு ஒரு மாதம், நீதிபதிக்கு ஒரு மாதம் -ஆக மூன்று மாதங்கள், அதிகம் போனால் மேலும் ஒரு 15 நாட்கள் என்று மனக்கணக்குப்போட்டு, ஏப்ரல் 18-க்குள், விடுமுறை நாட்கள் தவிர நாள்தோறும் வழக்கை நடத்தி, மேல் முறையீட்டு மனுவைக் கர்நாடகா உயர் நீதிமன்றம் முடித்துவிட வேண்டும் என்று தனது வரம்பு மீறி எச்.எல்.தத்து உத்திரவு போட்டுள்ளார்.

**“ஜெ.-சசி கும்பலுக்கு எதிரான சொத்துக்குவிப்பு வழக்கை பெங்களூருவுக்கு மாற்றியபோது ஒரு ஆண்டுக்குள் முடிக்க வேண்டுமென்று உத்திரவு போட்டதும் இதே உச்ச நீதிமன்றம்தான்! ஆனால், அப்போதிருந்து வழக்கைப் பத்தாண்டுகள் ஜெயா-சசி தரப்பு இழுத்தடித்தது. அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததும் இதே உச்ச நீதிமன்றம்தான்! அது மட்டுமல்ல; இவ்வாறு அக்கும்பல் கோரியதற்கு மேல் கால அவகாசம் கொடுத்து, வழக்கை இழுத்தடிப்பதற்குக் காரணமாக இருந்ததும் இதே உச்ச நீதிமன்றம்தான்! என்ன ஒரு நீதி!”**



இந்த நாட்டு சட்ட-நீதி வரலாறு இதுவரை காணாததொரு தீர்ப்பு! இதே வழக்கின் 100 பக்க ஆவணத்தைப் படிப்பதற்கு ஜெயா-சசி கும்பல், அது வழக்கை இழுத்தடித்தபோது மாதக் கணக்கில் அவகாசம் கேட்டுப் பெற்றது. இப்போது அக்கும்பலின் 2.5 இலட்சம் பக்கங்களைக் கொண்ட மேல்முறையீட்டு மனுவை ஒரு மாதத்திற்குள் படித்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டு தீர்ப்புச் சொல்ல வேண்டுமாம்! இந்த வழக்கை பெங்களூருவுக்கு மாற்றியபோது ஒரு ஆண்டுக்குள் முடிக்க வேண்டுமென்று உத்திரவு போட்டதும் இதே உச்ச நீதிமன்றம்தான்! ஆனால், அப்போதிருந்து வழக்கைப் பத்தாண்டுகள் ஜெயா-சசி தரப்பு இழுத்தடித்தது. அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததும் இதே உச்ச நீதிமன்றம்தான்! அது மட்டுமல்ல; இவ்வாறு அக்கும்பல் கோரியதற்கு மேல் கால அவகாசம் கொடுத்து, வழக்கை இழுத்தடிப்பதற்குக் காரணமாகக் இருந்ததும் இதே உச்ச நீதிமன்றம்தான்! என்ன ஒரு நீதி!

2009-ஆம் ஆண்டு அலைக்கற்றை ஊழல் வழக்கில் தொடங்கி கடந்த ஐந்தாண்டுகளாக அண்ணா ஹசாரே, கேஜரிவால் முதற்கொண்டு மோடி வரை நாட்டின் முதன்மையான ஊழல் எதிர்ப்புப் போராளிகளாக அவதாரம் எடுத்து ஆட்டம் போட்டார்கள். இதிலும் சந்தர்ப்பவாதமாக நடித்து அவர்கள் நாடகமாடினார்கள்தான். என்றாலும், மக்களை ஏய்ப்பதற்காகவும் சவடாலுக்காவும் நீதித்துறையின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சியாக அதை முன்நிறுத்தி நாடு முழுவதும் ஊழல் எதிர்ப்புச் சூழலை உருவாக்கி மக்களிடையே பிரமையை விதைத்திருக்கிறார்கள். அந்த நிலைமையிலும் உயர், உச்ச நீதிமன்றங்களும் அவற்றிலுள்ள பார்ப்பன-பிழைப்புவாத நீதிபதிகளும், ஜெயா-சசி போன்ற கிரிமினல் குற்றக் கும்பல்களும் அத்தகைய பிரமைகளைத் தகர்ப்பதையும் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

நாடு முழுவதுமுள்ள நீதிமன்றங்களில் இலட்சக்கணக்கான வழக்குகள் தீர்க்கப்படாமல் இருக்கும்போது, ஜெயா-சசி கும்பலின் மேல் முறையீட்டு வழக்கில் மட்டும் உச்ச நீதிமன்றம் இத்தனை வேகம் காட்டுவது ஏன்?

நீதிபதி எச்.எல்.தத்துவே இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறார். ''இது விதிவிலக்கான வழக்கு; பிரத்யேகமான வழக்கு என்பதால் இந்தக் கால வரையறைக்குள் முடித்துத் தரவேண்டுமென்று'' உத்திரவு போட்டிருக்கிறார். உண்மைதான்! பிரம்மஸ்ரீ கிரிமினல் குற்றவாளி மீதான வழக்கு என்பதால் விதிவிலக்கானது, பிரத்யேகமானதுதான்!

● ஆர்.கே.

## முல்லைப் பெரியாறு:

# அணையைப் பாதுகாக்க அணிதிரள்வோம்!

**கே**ரள ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகளும், போலி கம்யூனிஸ்டுகளும் தொடர்ந்து கேரள மக்களிடம் முல்லைப் பெரியாறு அணையைப் பற்றித் தவறான செய்தியை பரப்பி இனவெறியூட்டி அரசியல் ஆதாயம் அடைய எத்தனிக்கிறார்கள். முல்லைப் பெரியாறு அணையைப் பாதுகாக்க நியமிக்கப்பட்டிருக்கும் கேரள போலீசாரோ, தமிழக பொறியாளர்களை எந்தப் பணியும் செய்யவிடாமல் தடுப்பது, தேவையில்லாமல் தொல்லை கொடுப்பது, அவர்களை அச்சுறுத்துவது போன்ற நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர்.



இந்நிலையில், கடந்த நவ-17 அன்று போலி கம்யூனிஸ்டு கட்சியான சி.பி.ஐ.யின் கேரள சட்டமன்ற உறுப்பினர் பிஜூ மோள் மற்றும் அவரது குண்டர்கள் பாதுகாக்கப்பட்ட அணைப் பகுதிக்குள் அனுமதியின்றி அத்துமீறி நுழைந்து, தமிழக பொதுப்பணித்துறை செயற்பொறியாளார் மாதவன் உள்ளிட்டோரைத் தாக்கினர்.

இதனைக் கண்டிக்கும் விதமாகவும், இனவெறி பிடித்த கேரள ஓட்டுக்கட்சிகளின் தொடர் அட்டூழியங்களுக்கெதிராகவும் தேனி மாவட்டம் முல்லைப் பெரியாறு அணைப் பாதுகாப்புக் குழு சார்பாக கடந்த நவ-18 அன்று பிஜூ மோள் உருவபொம்மை எரிப்பு மற்றும் மறியல் போராட்டம் நடைபெற்றது.

''மக்கள் நேரடியாக முல்லைப் பெரியாறு அணையையும் அங்கு இருக்கும் அதிகாரிகளையும் பாதுகாக்க போர்க்கோலம் பூண்டு வர வேண்டும், அனைத்து தடைகளையும் தகர்த்து முல்லைப் பெரியாறு அணையைப் பாதுகாக்க வேண்டும்'' என்று மாற்றுத் தீர்வை முன்வைத்து வி.வி.மு. ஒருங்கிணைப்பில் நூற்றுக்கணக்கான மக்கள் அணிதிரண்டு நடத்திய இப்போராட்டம், விவசாயிகள் மத்தியில் புதிய நம்பிக்கையை தோற்றுவித்துள்ளது.

● பு.ஜ.செய்தியாளர்.

# குற்றவாளி ஆளும் தமிழகம்! நீதிமன்றத்தின் முகத்தில் மலம்!!

> தண்டிக்கப்பட்ட குற்றவாளியான ஜெயா, போயசு தோட்டத்து மாளிகையில் இருந்துகொண்டு தமிழகத்தை ஆளுவதைச் சகித்துப் போவது வெட்கக்கேடானது.

**ரா**மனின் பாதரக்ஷையை அரியணையில் அமர்த்தி பரதன் அயோத்தியை ஆண்ட புராணக் கதையை இன்றைய தமிழகம் புதிய வடிவில் கண்டு வருகிறது. பதினான்கு ஆண்டுகள் வனவாசம் போகுமாறு விதிக்கப்பட்ட ராமனின் இடத்தில் ஊழல் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்ட ஜெயா. ராமனின் செருப்பு இருந்த இடத்தில் ஓ.பன்னீர்செல்வம். தலைமைச் செயலகத்துக்கும் போயசு தோட்டத்துக்கும் தூரம் அதிகமில்லை என்பதாலும், அ.தி.மு.க.வில் செகண்ட் ஹீரோக்களுக்கு இடமில்லை என்பதாலும் இந்த நவீன இராமாயணத்தில் பரதன் கதாபாத்திரம் ரத்து செய்யப்பட்டுவிட்டது.

அரியணையில் அமர வைக்கப்பட்ட ராமனின் செருப்பிற்குக்கூடக் கொஞ்சம் தலைக் கனம் ஏறியிருக்கலாம். ஆனால், பன்னீர்? தன் பெயருக்கு முன்னால் முதலமைச்சர் எனப் போட்டுக் கொள்வதில்லை, தலைமைச் செயலகத்தில் முதலமைச்சருக்குரிய அறையைப் பயன்படுத்துவதில்லை, சட்டசபையில் முதலமைச்சருக்குரிய நாற்காலியில் அமருவதில்லை, சட்டசபை வளாகத்தில் ஜெயாவின் காரை நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில்கூடத் தனது காரை நிறுத்துவதில்லை என அவரது பணிவு கொடிகட்டிப் பறக்கிறது.

தீபாவளிக்குச் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்ட சில்லறை விசயம் தொடங்கி பிரதமர் மோடி நடத்திய முதலமைச்சர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியது வரை எல்லா இடங்களிலும் இது அம்மாவின் வழி காட்டுதலில் நடந்துவரும் ஆட்சி என்பதைத் திரும்பத் திரும்ப அடக்கத்தோடு பதிவு செய்ய பன்னீர் மறந்ததேயில்லை. சமீபத்தில் நடந்த சட்டமன்றக் கூட்டத்தில் சட்டம்-ஒழுங்கு தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விக்கு, ‘‘ஆட்சியாளர்களின் பணி, முன்னேற்றம், நிர்வாகத்திறன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் அம்மா இன்றைக்கு நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்’’ எனப் பதில் அளித்து, அம்மாவின் பாதரக்ஷைத் தமிழகத்தை ஆளவில்லை, அம்மாதான் போயஸ் தோட்டத்து மர்மக் குகைக்குள் இருந்து கொண்டு ஆண்டு வருகிறார் எனத் தெளிவுபடுத்தினார், அவர்.

உச்சநீதிமன்றம் கடந்த அக்டோபரில் ஜெயாவிற்கு நிபந்தனை ஏதுமற்ற பிணை வழங்கிய பிறகு, ஜெயாவின் வழக்குரைஞர் பாலி நாரிமன், ‘‘தங்களின் வழிகாட்டுதலில்தான் தமிழக அரசு இயங்குகிறது என்கிற **தோற்றத்தைக்கூட** உருவாக்கக்கூடாது’’ எனக் குறிப்பிட்டு அவருக்குக் கடிதமொன்றை எழுதியிருக்கிறார். நீதிமன்ற உத்தரவுகளையே பகிரங்கமாகக் காலில் போட்டு



மிதிக்கும் தன்னகங்காரம் கொண்ட ஜெயா, கேவலம் தன்னிடம் பீஸ் வாங்கும் வழக்குரைஞரின் கடிதத்தை எதைத் துடைக்கப் பயன்படுத்தியிருப்பார் எனச் சொல்லத் தேவையில்லை.

பெங்களூரு சிறப்பு நீதிமன்றம் சொத்துக்குவிப்பு வழக்கில் அளித்த தீர்ப்பில், ''எந்தெந்த வங்கிகளில் இவர்களுக்கு நிரந்தரக் கணக்கு மற்றும் பணம் கையிருப்பு இருக்கிறதோ அந்த வங்கிகளில் இருந்து எடுத்து அபராதத் தொகைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்தத் தொகையும் அபராதத்துக்குப் போதவில்லையென்றால், இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ள தங்கம் மற்றும் வைர ஆபரணங்களை (இவர்களால் கணக்குக் காட்ட முடிந்த 7,080 கிராம் தங்கம் மற்றும் வைர ஆபரணங்களைத் தவிர்த்து) ரிசர்வ் வங்கி அல்லது ஸ்டேட் வங்கி அல்லது பொதுமக்களிடம் ஏலம்விட்டு அதில் கிடைக்கும் தொகையையும் அபராதத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த வழக்கில் இணைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களான நிறுவனங்கள் மற்றும் நிலங்களை மாநில அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும்'' என உத்தரவிட்டுள்ளது.

குற்றவாளியிடமே தீர்ப்பை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் சிக்கிக் கொண்டிருப்பதுதான் இவ்வழக்கில் முரண்நகை. ஊழல் வழக்கில் ஜெயா தண்டிக்கப்பட்ட விவரத்தையும், அதனால் அவர் பதவியிழந்து, அவர் போட்டியிட்டு வென்ற சிறீரங்கம் தொகுதி காலியாகிவிட்டதையும் அமுக்கிவிட முயன்ற அ.தி.மு.க. அரசு, இப்பிரச்சினை தொடர்பாக தி.மு.க. நீதிமன்றத்தை அணுகப் போகிறது எனத் தெரிந்த பிறகுதான், இந்த விவரங்களை, தீர்ப்பு வந்து ஒன்றரை மாதங்கள் கழித்து அரசிதழில் வெளியிட்டது. ஊருக்கே தெரிந்த தண்டனை விவரத்தை அரசிதழில் வெளிட்டதற்காகச் சட்டப்பேரவைச் செயலர் ஜமாலுதீனுக்கு நேர்ந்த கதியைப் பார்த்த பிறகு, எந்தவொரு அதிகாரியாவது ஜெயாவிடமுள்ள திருட்டுச் சொத்துக்களைக் கையகப் படுத்தத் துணிவாரா?

இதுவொருபுறமிருக்க, தமிழக அரசின் இலஞ்ச ஒழிப்பு பிரிவுதான் பெங்களூரு நீதிமன்ற உத்தரவை அமல்படுத்த வேண்டுமாம். அந்தப் பிரிவின் ஐ.ஜி.யாக இருக்கும் குணசீலனோ ஜெயாவின் தீவிர விசுவாசி. இதனாலேயே அவர் மே 2013-லேயே பதவி ஓய்வு பெற்ற பிறகும், அவரது பதவிக் காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டிப்புச் செய்து, தனக்கு அரண் அமைத்துக் கொண்டுள்ளது ஜெயா கும்பல்.

பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுப் பிணையில் வெளியே வந்த பிறகு, ஜெயா போயசு தோட்டம் என்ற அலிபாபா குகையைவிட்டு வெளியே வருவதில்லை என்றாலும், தலைமைச் செயலகம் தொடங்கி கிராமப் பஞ்சாயத்து அலுவலகங்கள்வரை அரசின் அதிகாரத் தாழ்வாரங்களை எல்லாம் அவரது படம் அலங்கரித்து வருகிறது. அறிவிக்கப்பட்ட அரசின் திட்டங்களிலிருந்து இன்னும் அவர் பெயரும் படமும் மறைந்துவிடவில்லை. அவர் கூடிய விரைவில் மீண்டும் முதலமைச்சர் ஆகிவிடுவார் என்ற நம்பிக்கையில் புதிய திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இப்படி சட்டம், நீதிமன்றத் தீர்ப்பு, அறநெறிகளைக் கடுகளவிற்குக்கூட மதிப்பு கொடுக்காமல், ஜெயா தனது தர்பாரை நடத்திக் கொண்டிருக்கிறார் என்பது மட்டுமல்ல, பல மர்மங்கள் நிறைந்ததாகவும் இந்த பினாமி ஆட்சி விளங்குகிறது.

சட்டப்பேரவைச் செயலராக இருந்த ஜமாலுதீன் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டாரா அல்லது நிர்பந்தம் காரணமாக அவரே பதவி விலகிவிட்டாரா என்பது இன்னும் புதிராகவே இருந்துவருகிறது. தலைமைச் செயலராக இருந்த மோகன் வர்கீஸ் சுங்கத் உப்புச்சப்பில்லாத பதவிக்குத் தூக்கியடிக்கப்பட்டு, அந்த இடத்தில் பதவி மூப்பில் மிகவும் பின்தங்கியிருக்கும் ஞானதேசிகன் நியமிக்கப்பட்டதற்கு தமிழக அரசின் ஆலோசகராக இருந்துவரும் ஷீலா பாலகிருஷ்ணன்தான் காரணமென கிசுகிசுக்கள் வெளியாகியுள்ளன. இந்த ஆலோசகர் பதவியென்பதே ஓர் அலங்காரப் பதவிதான்.

சட்டத்திற்கு அப்பாற்பட்ட வகையில் இருந்து கொண்டு தமிழக அரசை ஆட்டுவிக்கும்
ஜெயா மற்றும் அவரது கையாட்கள் ஷீலா பாலகிருஷ்ணன், இராமானுஜம்.





ஜெயாவின் தண்டனை விவரத்தை அரசிதழில் வெளியிட்ட ‘குற்றத்திற்காக’ சட்டப் பேரவைச் செயலர் பதவியில் இருந்து தூக்கியடிக்கப்பட்ட ஜமாலுதீன் (இடது); தலைமைச் செயலர் பதவியிலிருந்து அதிரடியாகத் தூக்கியடிக்கப்பட்ட மோகன் வர்கீஸ் சுங்கத்.

அதற்குச் சட்டபூர்வத் தகுதியெல்லாம் கிடையாது. ஆனாலும், ஷீலா பாலகிருஷ்ணன்தான் சூப்பர் தலைமைச் செயலராகச் செயல்பட்டுவருவதாகவும், இதன் காரணமாக ஏற்பட்ட முட்டல் மோதலின் விளைவாகவே மோகன் வர்கீஸ் சுங்கத் தூக்கியடிக்கப் பட்டதாகவும் புலனாய்வு இதழ்கள் குறிப்பிடுகின்றன.

இராமானுஜம் தமிழக டி.ஜி.பி. பதவியிலிருந்து கடந்த நவம்பர் மாதம் ஓய்வுபெற்ற நாளன்றே, அவரைத் தமிழக அரசின் இன்னொரு ஆலோசகராக நியமித்தது, ஜெயாவின் பினாமி அரசு. இராமானுஜம் பதவி நீட்டிப்புப் பெற்று கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழக டி.ஜி.பி.யாக இருந்ததே சட்டவிரோதமானது என முந்தைய காங்கிரசு அரசு குற்றஞ்சுமத்தியதோடு, அவரது பதவி நீட்டிப்பை அங்கீகரிக்கவும் மறுத்தது. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுதே அவருக்கு டி.ஜி.பி. சலுகைகளோடு ஆலோசகர் பதவி அளிக்கப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தல் சமயத்தில் இராமானுஜம் அ.தி.மு.க.வின் கள்ள ஓட்டு, பணப்பட்டுவாடாவிற்குச்சாதகமாக நடந்துகொண்டதற்கு அளிக்கப்பட்டுள்ள பரிசு இது.

சூப்பர் முதல்வர் ஜெயா, சூப்பர் தலைமைச் செயலர் ஷீலா பாலகிருஷ்ணன், சூப்பர் டி.ஜி.பி. இராமானுஜம் என இந்த ஆட்சியைச் சட்டத்திற்கு அப்பாற்பட்ட இந்த அதிகார கும்பல்தான் நடத்திவருகிறது. பிறகு, சட்டப்படி பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் என்ன வேலை என்று கேட்கிறீர்களா? ஒவ்வொரு துறையிலும் கோடிக்கணக்கில் ஊழல் புரிந்து, அதைப் பெட்டிபெட்டியாக போயஸ் தோட்டத்துக்கு அனுப்பும் வேலையை வார நாட்களில் செய்கிறார்கள். மற்ற நாட்களில் அம்மாவை மீண்டும் முதல்வராக்க ஆண்டவனை வேண்டி கோவில் கோவிலாய்ப் போய் பூஜைகளையும் யாகங்களையும் நடத்துகிறார்கள்; காசு கொடுத்துக் கும்பலைச் சேர்த்து பால்குடம் எடுக்க வைக்கிறார்கள்.

சத்துணவு முட்டையின் விலையை ரூ.4.50 எனச் சந்தை விலையைவிடக் கூடுதலாக நிர்ணயம் செய்திருப்பதும்; கோழிப் பண்ணை எதுவுமே நடத்தாத, முட்டை குடோன்கூட வைத்து நடத்தாத கிறிஸ்டி மற்றும் சொர்ணபூமி நிறுவனங்களுக்குத் தமிழகம் முழுவதும் நாளொன்றுக்கு 60 இலட்சம் முட்டைகளை விநியோகிக்கும் ஒப்பந்தத்தை வழங்கியிருப்பதும் அம்மா ஆட்சியின் கொள்ளையடிக்கும் நோக்கத்தைப் புட்டுவைக்கின்றன. சந்தைவிலையைவிடக் கூடுதலாக விலையை ஏற்றிக் கொடுத்திருப்பதன் மூலம் மட்டும் அரசுக்கு ஏற்படும் இழப்பு 80 கோடி ரூபாயாகும் என நாமக்கல் மாவட்ட முட்டை உற்பத்தியாளர்கள் கூறுகிறார்கள்.

முட்டை ஊழலுக்கு அடுத்து, ரேஷன் கடைகளின் மூலம் சிறப்பு விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் துவரம்பருப்பு மற்றும் உளுந்தம் பருப்பு கொள்முதலில் 3,000 கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடு நடந்திருப்பதாக பா.ம.க. நிறுவனத் தலைவர் இராமதாசு குற்றஞ்சுமத்தியிருக்கிறார். சந்தை விலையைவிடக் கூடுதலாகக் கொடுத்து பருப்பு வாங்க ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்

கிருஷ்ணகிரி நகர்மன்றக் கூட்டத்தில் ஊழல் குற்றவாளி ஜெயாவுக்கு ஆதரவாக ரகளை - அடிதடியில் இறங்கிய அ.தி.மு.க. கவுன்சிலர்கள்.



டிருப்பதாகவும், இந்த ஒப்பந்தமும் நாமக்கல்லைச் சேர்ந்த ராசி நியூட்ரிஃபுட்ஸ் என்ற ஒரே நிறுவனத்திற்கு ஓராண்டிற்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் இதில் ஆட்சியாளர்கள் 40 கோடி ரூபாய் வரை இலஞ்சம் பெற்றிருப்பதாகவும் அவர் அம்பலப்படுத்தியிருக்கிறார்.



> சட்டத்திற்கு அப்பாற்பட்ட வகையிலும், மேலாகவும் இருந்துகொண்டு ஆட்சியதிகாரத்தை அனுபவித்து வரும் ஜெயா–சசி கும்பலைத் தட்டிக் கேட்பதற்கான துணிவும் நேர்மையும் எதிர்க்கட்சிகளிடம் மட்டுமல்ல, உச்ச, உயர்நீதி மன்றங்களிடமும் இல்லை.

கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் தமிழகமெங்குமுள்ள தனியார் பள்ளிகளில் நடப்பாண்டில் 74,217 மாணவர்கள் சேர்ந்திருப்பதாகவும் இவர்களுக்கான கட்டணம் 25.13 கோடி ரூபாய் என்று சட்டசபை பட்ஜெட் கூட்டத்தொடரில் கல்வி அமைச்சர் வீரமணி அறிவித்தார். பள்ளிக் கல்வித் துறை செயலர் சபீதா இச்சட்டத்தின் கீழ் 89,941 மாணவர்கள் சேர்ந்திருப்பதாகக் கூறிவருகிறார். இந்நிலையில் சட்டப் பஞ்சாயத்து இயக்கம் இது தொடர்பான விவரங்களைத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்டதற்கு, நடப்பு கல்வியாண்டில் 2,959 மாணவர்கள் மட்டுமே கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் சேர்ந்திருப்பதாகப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மட்டும் 23 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடந்திருப்பதாக அவ்வியக்கம் அம்பலப்படுத்தியிருக்கிறது.

கடந்த ஓராண்டில் மட்டும் தமிழகமெங்கும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கவுன்சிலிங் மூலம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஒரு இடமாற்றத்திற்கு 6 முதல் 7 இலட்ச ரூபாய் வரை பெறப்பட்டு, இதில் 500 கோடி ரூபாய் வரை இலஞ்சப் பணம் கைமாறியிருப்பதாக பா.ம.க. நிறுவனர் இராமதாசு அம்பலப்படுத்தியிருக்கிறார்.

இவற்றுக்கு அப்பால் ஆவின் பால் திருட்டு ஊழல், சென்னை மாநகராட்சி ரோடு காண்டிராக்டு ஊழல், சத்து மாவு விநியோகத்தில் நடந்துள்ள முறைகேடுகள், சென்னை பெருநகருக்குள் பேருந்து நிழற்குடைகளை அமைக்கத் தனியாருக்கு ஒப்பந்தம் வழங்கியதில் நடந்துள்ள முறைகேடுகள் எனப் புற்றீசல் போல ஊழல்களும் முறைகேடுகளும் அம்பலமாகி வருகின்றன. சகாயம் கமிசனை அமைக்கச் சொல்லி சென்னை உயர்நீதிமன்றம் போட்ட உத்தரவை ரத்து செய்வதற்கும், அது முடியாமல் போன பிறகு அக்கமிசனின் விசாரணையை முடக்குவதற்கும் இப்பினாமி அரசு எடுத்துவரும் முயற்சிகள் ஒவ்வொன்றும் எப்பேர்பட்ட கிரிமினல் கும்பலிடம் தமிழகத்தின் ஆட்சியதிகாரம் சிக்கிக் கொண்டிருக்கிறது என்பதைப் பளிச்சென எடுத்துக்காட்டுகின்றன.

சட்டத்திற்கு அப்பாற்பட்ட வகையிலும், மேலாகவும் இருந்துகொண்டு ஆட்சியதிகாரத்தை அனுபவித்து வரும் ஜெயா-சசி கும்பலைத் தட்டிக் கேட்பதற்கான துணிவும் நேர்மையும் எதிர்க்கட்சிகளிடம் மட்டுமல்ல, உச்ச, உயர்நீதி மன்றங்களிடமும் இல்லை. ஜெயா தண்டிக்கப்பட்டதைச் சாக்காக வைத்துக்கொண்டு தமிழகமெங்கும் வன்முறையில் ஈடுபட்ட அ.தி.மு.க.வைத் தடைசெய்யக் கோரும் வழக்கு, அரசு அலுவலங்களிலும் அதனின் இணைய தளங்களிலும் ஜெயாவின் படத்தை எடுக்கக் கோரும் வழக்கு, நீதிபதி குன்ஹாவைக் கீழ்த்தரமாக விமர்சித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதற்கும், கண்டனத் தீர்மானங்கள் இயற்றப்பட்டதற்கும் எதிரான வழக்கு என இந்த மூன்று மாதங்களில் அ.தி.மு.க.வின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. நியாயமாகப் பார்த்தால், இந்த ஒவ்வொரு வழக்கிலும் ஜெயா முதன்மைக் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், உயர்நீதிமன்றம் அவ்வழக்குகளை இந்தக் கோணத்தில் பார்க்கவோ, நடத்திச் செல்லவோ மறுக்கிறது. மாறாக, வாய்தாவுக்கு மேல் வாய்தா அளித்து தொடுக்கப்பட்ட வழக்குகளையும் இழுத்தடித்து அ.தி.மு.க. கும்பலுக்குச் சாதகமாக நடந்துவருகிறது.

“ஜெயாவின் கட்சிக்காரர்கள் கட்டுப்பாடின்றி நடந்து கொள்வதற்கு, அவர் என்ன செய்ய முடியும்? அவர் தான் இந்த வன்முறையைத் தூண்டிவிட்டு நடத்தினார் என்பதற்கு ஏதாவது ஆதாரம் உள்ளதா?” என ஜெயாவின் வக்கீலாக மாறி வாதிட்டார் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தத்து. அந்நீதிமன்றம் இப்பொழுது ஜெயா-சசி கும்பலுக்குப் பிணையை நீட்டித்துக் கொடுத்திருப்பதோடு, அடுத்த ஆண்டு ஏப்ரலுக்குள் அக்கும்பலின் மேல்முறையீட்டு மனுவையும் விசாரித்து முடிக்கும்படி உத்தரவும் போட்டுவிட்டது. இந்நிலையில் பகற்கொள்ளைக் கூட்டமான ஜெயா-சசி கும்பலை ஆட்சியதிகாரத்திலிருந்து துரத்தவும், கிரிமினல் குற்றங்களுக்காகத் தப்பிவிடாதபடி தண்டிக்கவும் சட்ட வழிமுறைகளின்படி வாய்ப்புள்ளதாக யாரேனும் நம்பமுடியுமா?

● செல்வம்

## சி.ஐ.ஏ.:

# பயங்கரவாதத்தின் பிதாமகன்!

இஸ்லாமியத் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டுள்ள விசாரணைக் கைதிகளைக் கொடூரமாக வதைக்கும் சி.ஐ.ஏ.-வின் சித்திரவதைகள் குறித்து அண்மையில் வெளிவந்துள்ள அமெரிக்க செனட் அறிக்கை, உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளால் நடத்தப்பட்டுவரும் ஆக்கிரமிப்புப் போரையும், சித்திரவதைகளையும் மட்டுமின்றி, இச்சித்திரவதைகள் அமெரிக்க அரசுக்கும் அதிகார வர்க்கத்துக்கும் தெரிந்தேதான் நடந்துள்ளன என்ற உண்மையையும் இந்த செனட் அறிக்கை அம்பலமாக்கியிருக்கிறது.

விசாரணைக் கைதிகளை நிர்வாணப்படுத்தி வதைப்பது, பல நாட்களுக்குத் தூங்கவிடாமல் தொடர்ந்து சித்திரவதை செய்வது, மலக்குழாய் வழியாக உணவை வலுக்கட்டாயமாகச் செலுத்தி வதைப்பது, வாட்டர் போர்டிங் எனப்படும் நீரில் மூழ்கடித்துச் சாவின் விளிம்புவரை கொண்டு சென்று வதைப்பது, நடுங்கவைக்கும் குளிரில் நீண்ட நேரம் நிற்க வைப்பது, குறுகிய சங்கிலியின் மீது பல மணி நேரம் குனிந்தே நிற்க வைப்பது, நாய்களைக் காதருகே குரைக்க விட்டு அச்சுறுத்துவது, சுவரில் கைதியைத் தூக்கிவீசி அறைவது, பெட்டிக்குள் கை, கால்களை மடக்கி நீண்ட நேரத்துக்கு உட்கார வைப்பது, சவப்பெட்டிக்குள் அடைத்து வைத்து மூச்சுத் திணற வைத்து வதைப்பது, பெண்களைப் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கி வதைப்பது, விசாரணைக் கைதிகளது குடும்பத்தாரையும், அண்டை வீட்டாரையும் மிரட்டி வதைப்பது-என அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. நடத்தியுள்ள கொடூரமான சித்திரவதைகள் இன்று பகிரங்கமாக வெளிவந்து உதிரத்தையே உறைய வைக்கின்றன.

அமெரிக்காவில் இத்தகைய சித்திரவதைகளை நடத்தினால் அம்பலமாக நேரிடும் என்பதால், தனது விசுவாச - கைக்கூலி நாடுகளில் இரகசிய வதைக்கூடங்களை அமைத்து, சந்தேகிப்போரை இரகசியமாக கடத்திச் சென்று, இக்கொடூரங்களை கிரிமினல்தனமாக சி.ஐ.ஏ.வும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் நடத்தியிருக்கின்றனர். அமெரிக்காவுக்கும் அதன் விசுவாச கைக்கூலி நாடுகளுக்குமிடையே ஒரு இரகசிய ஒப்பந்தம் போட்டுக் கொள்ளப்பட்டு, அதன் படியே இத்தகைய வதைமுகாம்கள் அமெரிக்காவுக்கு வெளியே வைத்து இயக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தானின் கராச்சியைச் சேர்ந்த ஆஃபியா சித்திகி என்ற பெண் மருத்துவ விஞ்ஞானி கடந்த 2003-ஆம் ஆண்டில் அமெரிக்கா சென்றிருந்தபோது ‘காணாமல்’ போனார். அவர் ஒரு பயங்கரவாதி என்று முத்திரை குத்தி சி.ஐ.ஏ.வால் கடத்தப்பட்டு பல ஆண்டுகளாக வெளியுலகுக்கே தெரியாமல் ஆப்கானிலுள்ள அமெரிக்க சித்திரவதைக் கூடமான பாக்ராம் விமான தளத்தில் அடைக்கப்பட்டு, மிருகத்தனமான சித்திரவதைக்கும் பாலியல் வன்முறைக்கும் ஆளான கொடூரத்தை பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஒருவர் வெளிக்கொணர்ந்தார். முஸ்லிமாகப் பிறந்ததைத் தவிர அந்தப் பெண் வேறெந்தக் குற்றத்தையும் செய்யவில்லை.

‘‘காலவரையற்ற சட்டவிரோதக் கைதுகளை ரத்து செய்! விசாரணைக் கைதிகள் மீது வழக்கைப் பதிவு செய்! அல்லது விடுதலை செய்!’’ என்ற முழக்கத்துடன், விசாரணைக் கைதிகளைப் போல வேடமணிந்து மனித உரிமை அமைப்பினர் அமெரிக்காவில் நடத்திய ஆர்ப்பாட்டம்.




அபு சுபைதா என்ற இஸ்லாமியர் போலந்து நாட்டின் எல்லையில் உள்ள இரகசிய வதைமுகாமில் வைத்து வாட்டர் போர்டிங் எனும் தண்ணீரில் மூழ்கடிக்கும் சித்திரவதையால் உடலெல்லாம் விறைத்து மரக்கட்டையாகி வாயிலிருந்து நுரை தள்ளும் வரை அவரை 12 ஆண்டுகளாக வதைத்துள்ளதை அவரது வழக்குரைஞர் அண்மையில் அம்பலப்படுத்தியுள்ளார். இப்படித்தான் கியூபா அருகே குவாண்டநாமோ விரிகுடாவில் உள்ள சி.ஐ.ஏ.வின் இரகசிய கொட்டடியிலும், மிதக்கும் சிறைச்சாலை எனும் கப்பல்

களிலேயே உருவாக்கப்பட்டுள்ள இரகசிய சிறைக் கொட்டடிகளிலும் பலர் வதைக்கப் பட்டுள்ளனர்.

இத்தகைய இரகசிய ஆட்கடத்தல் - சித்திர வதைகள் நடந்துள்ளதைப் பற்றி ஏற்கெனவே சில மனித உரிமை அமைப்புகளும், தன்னார் வக் குழுக்களும், ஐரோப்பிய நாடாளுமன்றம் அமைத்த விசாரணைக் குழுவும், விக்கி லீக்சும் அம்பலப்படுத்தியுள்ளன. அமெரிக்காவின் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான குரல்கள் வலுவடைந்துள்ள நிலையில், நம் நாட்டின் விசாரணைக் கமிசன் அறிக்கை போல நீர்த்துப் போன வழியில் இப்போது இந்த அறிக்கை வெளியாகியிருக்கிறது.




இச்சித்திரவதைகளை ஏதோ கொள்கையில் நேர்ந்த தவறு போலத்தான் செனட் குழுவின் அறிக்கை கூறுகிறது. ஆனால், வரலாற்று ரீதியாகவே சி.ஐ.ஏ. என்பது பிற நாடுகளை உளவு பார்க்கவும், பயங்கரவாதப் படுகொலை - சித்திரவதைகளுக்காகவும் உருவாக்கப்பட்ட நிறுவனம் என்பதே உண்மை. இதனால்தான் 6700 பக்கங்களைக் கொண்ட செனட் அறிக்கையில் தற்போது 500 பக்க அளவுக்கு வடிகட்டப்பட்ட அறிக்கை வெளியிடப் பட்டு, ஏனைய பக்கங்கள் இரகசியமாகவே வைக்கப் பட்டுள்ளன.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பிறகுதான் இத்தகைய சித்திரவதைகள் நடந்துள்ளதாகக் கூறப்பட்டாலும், அது ஒட்டுமொத்த சித்திரவதைகளில் ஒரு சிறு கூறுதான். ஆக்கிரமிப்புப் போரும், கொடிய சித்திரவதைகளும் ஏகாதிபத்தியத்தின் பிரிக்கமுடியாத அங்கங்கள். கொலைக் குழுக்களைக் கட்டியமைத்து இதுவரை அறிந்திராத கொடூரமான சித்திரவதைகளை வியட்நாம் போரில் அமெரிக்க ஏகாதிபத்தியம் கட்டவிழ்த்து விட்டது. ஆசிய, ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியல் தலைவர்களை அது படுகொலை செய்ததோடு, முன்னணியாளர்களைக் கடத்திச் சென்று காட்டுமிராண்டித்தனமாகச் சித்திரவதை செய்து கொன்றுவிட்டு, காணாமல் போனதாக அறிவித்தது.

அமெரிக்காவின் மேலாதிக்கத்துக்கு உடன்படாத அல்லது அமெரிக்காவை எதிர்க்கும் நாடுகள் இத்தகைய சித்திரவதைகளைச் செய்துள்ளதாக செய்திகள் கசிந்தால், அதையே முகாந்திரமாக வைத்து மனித உரிமைகளை மீறிவிட்டதாகக் கூப்பாடு போட்டு அந்நாட்டின் மீது இந்நேரம் அமெரிக்காதலைமையிலான ஏகாதிபத்தியங்கள் ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்திருக்கும். அல்லது பொருளாதாரத் தடைகளை விதித்து அந்நாட்டை முடமாக்கி அடிமைப்படுத்தியிருக்கும். ஆனால், அமெரிக்க ஏகாதிபத்தியம் இத்தகைய சித்திரவதைகளைச் செய்திருப்பதால், அது பயங்கரவாதத்துக்கு எதிரான செயலாகவும் தேசிய பாதுகாப்புக்கான அவசியமான நடவடிக்கையாகவும் நியாயப்படுத்தப்படுகிறது.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக போலீசுக் கொலைகள், போர்க் குற்றங்கள், உளவுத்துறையின் கொலைகள், நிதி மோசடிகள் பற்றிய எந்த விசாரணையும் அமெரிக்காவில் நடத்தப்பட்டதில்லை. எந்தக் குற்றவாளியும் வழக்கு மன்றத்தில் நிறுத்தப்பட்டதுமில்லை. ஜனநாயக நாடகமாடும் ஒபாமா ஆட்சியில், பாகிஸ்தானின் மேற்குப் பகுதியிலும் ஆப்கானிஸ்தானிலும் ஆளில்லா போர் விமானங்களைக் கொண்டு கொத்துக் கொத்தாக அப்பாவி மக்களைக் கொன்றொழித்த போதிலும் கூட, இக்கொடூரத்துக்கு எதிராக எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை.

ஏனெனில், அவர்கள் அமெரிக்க அரசியல் தலைவர்களால் பாதுகாக்கப்படுகின்றனர். அமெரிக்க பட்ஜெட்டில் பல நூறு கோடி டாலர்களை கொலைகார சி.ஐ.ஏ.வுக்கு ஒதுக்கி வருவதை அவர்கள் அங்கீகரித்தே வருகின்றனர். இதனால்தான் புஷ் ஆட்சிக் காலத்தில் துணை அதிபராக இருந்த டிக் செனியும், சி.ஐ.ஏ. இயக்குனரான ஜான் ப்ரென்னனும், வெள்ளை மாளிகையின் வழக்குரைஞர்களும் நாட்டின் நலன் கருதி, மனித இனத்துக்குப் பேரழிவை ஏற்படுத்தும் பயங்கரவாதிகளுக்கு எதிராக இத்தகைய சித்திரவதைகள் தவிர்க்கவியலாத தேவை என்று இன்றும்கூட திமிராகக் கொக்கரிக்கின்றனர்.

வடிவங்களில் வேறுபட்டாலும் சாராம்சத்தில் ஏகாதிபத்தியம் என்பது இப்படித்தான் இருக்க முடியும். பெருமையாக பீற்றிக் கொள்ளப்படும் முதலாளித்துவ ஜனநாயகம், மனித உரிமைகளின் யோக்கியதையையும், முதலாளித்துவ ஜனநாயகம் என்பதே மோசடி ஜனநாயகம்தான் என்பதையும் இப்போது செனட் குழுவின் அறிக்கையே அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது. இந்த யோக்கிய சிகாமணிகள்தான் கம்யூனிசம் என்றால் சர்வாதிகாரம், அடக்குமுறை என்றெல்லாம் இன்னமும் வெட்கமின்றிப் பிதற்றிக் கொண்டிருக்கின்றனர்.

● தனபால்

# நீதியின் பலிபீடங்களாக நீதிமன்றங்கள்!

**மக்கள் நலன் சார்ந்த பிரச்சினை தொடர்பான வழக்குகளில் நீதிமன்றங்களின் செயல்பாடுகள், அதன் தீர்ப்புகள் நீதியைக் காவு வாங்குவதாகவே உள்ளன.**

**நீ**தி - நியாயத்தை மக்கள் பெறுவதற்கான கடைசி புகலிடமாகச் சித்தரிக்கப்படும் நீதித் துறையானது, வழக்குகளைக் கையாளும் முறையே குற்றவாளிகளைக் காப்பாற்றும் நோக்கில்தான் உள்ளது என்பதை ஜெயலலிதா - சசிகலா கும்பலுக்குப் பிணை வழங்கிய தீர்ப்பு அம்பலப்படுத்தியிருக்கிறது. இது ஏதோ விதி விலக்கான விவகாரமாகக் கருத முடியாது. இப்படித்தான் ஏறத்தாழ எல்லா வழக்குகளையும் நீதித்துறை கையாள்கிறது . சாலைப் பணியாளர்கள் வேலை பறிக்கப்பட்ட வழக்கே இதற்குச் சான்று கூறப் போதுமானது.

தி.மு.க. ஆட்சியின்போது நியமிக்கப்பட்ட 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களை ஆட்சிக்கு வந்ததும் ஜெ. கும்பல் பணி நீக்கம் செய்து வீதியில் வீசியெறிந்ததை எதிர்த்து அப்பணியாளர்கள் தொடர்ந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி சுகுணா, பணிநீக்கத்துக்கு இடைக்காலத் தடை விதித்தார். இத்தீர்ப்புக்கு எதிராக ஜெ. அரசு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. அதை விசாரித்த தலைமை நீதிபதி இக்பால், சிவஞானம் ஆகியோர், நீதிபதி சுகுணா பிறப்பித்த உத்தரவை நீக்க முடியாது என்றும், மக்கள் நலப் பணியாளர்களை டிஸ்மிஸ் செய்யக் கூடாது என்றும் தீர்ப்பளித்தனர். பின்னர் இதை எதிர்த்து ஜெ அரசு உயர் நீதிமன்றத்தில் சீராய்வு முறையீடு செய்தது. இதை விசாரித்த நீதிபதி அனில்தவே, தீபக் மிஸ்ரா அடங்கிய அமர்வு, மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கத் தேவையில்லை என்று ஜெ. அரசுக்கு ஆதரவாக தீர்ப்பு கூறி உயர் நீதிமன்ற உத்தரவை ரத்து செய்தது.

இதை எதிர்த்து மக்கள் நலப் பணியாளர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். இந்த வழக்கை மீண்டும் சென்னை உயர் நீதிமன்றமே விசாரித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதன்படி, கடந்த ஆகஸ்ட் 19 அன்று இந்த வழக்கை விசாரித்த பால்வசந்தகுமார், சத்திய நாராயணன் ஆகிய நீதிபதிகள், மக்கள் நலப்பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்க வேண்டுமென்றும், பணி ரத்து செய்யப்பட்டதால் அவர்களில் 26 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதைக் குறிப்பிட்டு, அவர்களுக்கு அரசுப்பள்ளிகள், மதுஒழிப்புப் பிரச்சாரம் போன்ற வேறு பணிகளையாவது வழங்க வேண்டுமென்றும், இவற்றை 31.10.2014க்குள் நிறைவேற்ற வேண்டுமென்றும் தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர். இந்தத் தீர்ப்பை எதிர்த்து ஜெ. அரசு உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. இந்த மனு செப்.23 அன்று உச்ச நீதிமன்ற நீதிபதி அனில் தவே தலைமையிலான அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, உயர் நீதிமன்ற உத்தரவுக்குத் தடை விதித்து விசாரணையை ஜனவரி முதல் வாரத்துக்கு நீதிபதிகள் தள்ளி வைத்துள்ளனர்.

கடந்த மூன்றரை ஆண்டுகளாக மக்கள் நலப் பணியாளர்களை உச்ச நீதிமன்றம் வரை இழுத்தடித்து படாதபாடு படுத்தியிருக்கிறது ஜெ. அரசும் நீதித்துறையும். அவர்களில் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்ட மிகவும் பிற்பட்ட சமூகப் பின்னணியைச் சேர்ந்தவர்கள். கடந்த 20 ஆண்டுகளாகப் பணியாற்றியுள்ள அவர்கள்

இதர மாவட்டங்களில் கனிம வளச் சூறையாடலில் ஈடுபட்டுவரும் கொள்ளையர்கள் தப்பிக்கவும், முறைகேடுகளை மூடிமறைக்கவும் கால அவகாசத்தை ஏற்படுத்திக் கொடுத்து, தற்போதைக்கு மதுரை மாவட்டத்தில் மட்டும் விசாரித்தால் போதுமென்ற மொன்னையான நீதிமன்ற உத்தரவுப்படி, கிரானைட் முறைகேடுகள் குறித்து ஆய்வு செய்யும் முன்னாள் மதுரை மாவட்ட ஆட்சியர் சகாயம்.





ஜெ. அரசால் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள சாலைப் பணியாளர்கள், தங்களை மீண்டும் பணியில் அமர்த்தக் கோரி விழுப்புரம் அருகே தூக்குக்கயிறுடன் நடத்திய சாலை மறியல் போராட்டம்.(கோப்புப் படம்)

இத்தனை வருடங்களுக்குப் பிறகு வயதையும் தொலைத்துவிட்டு வேலையுமிழந்து பரிதவிக்கிறார்கள். ஆனாலும் ஜெ. அரசுக்குச் சாதகமாக இந்த வழக்கை இன்னமும் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது மனித உணர்ச்சியே இல்லாத நீதித்துறை. நீதித்துறை வழக்கைக் கையாளும் முறையைப் புரிந்துகொள்ள இதுவொரு உதாரணம்தான்.

தனியார் பள்ளிப் பேருந்துகளை முறைப்படுத்தக் கோரும் வழக்கு, குடியிருப்புப் பகுதிகளிலிருந்து டாஸ்மாக் கடைகளை அகற்றக் கோரும் வழக்கு, பெண்கள் மீதான பாலியல் கொடுமைகளைத் தடுக்கக் கோரும் வழக்கு, பேருந்து நிழற்குடைகளை அமைப்பதில் நடந்துள்ள ஊழல் குறித்த வழக்கு, விதிமுறைகளை மீறி அடுக்குமாடிக் குடியிருப்புகள் - வணிக வளாகங்கள் கட்டப்பட்டுள்ளதை எதிர்த்த வழக்கு, ஆக்கிரமிப்பாளர்களால் புழல் ஏரிப் பகுதியில் 18 கிணறுகளைக் காணவில்லை என்ற வழக்கு - என இப்படி எல்லா பொதுநல வழக்குகளையும் கண்டுகொள்ளாது தட்டிக்கழிப்பது, ஒத்திவைப்பது, அரசிடம் விளக்கம் கேட்டு வழக்கை இழுத்தடிப்பது, தானே போட்ட உத்தரவுகளைச் செயல்படுத்த எந்த நடவடிக்கையும் இன்றிச் செயலற்றுக் கிடப்பது - என்பனவற்றின் மூலம் மேற்படிக் குற்றங்களுக்கு நீதித்துறையே உடந்தையாக மாறிப்போய்விட்டது.

அண்மையில் டிராபிக் ராமசாமி தொடுத்த பொதுநல வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், கனிமவள முறைகேடுகள் பற்றி விசாரிக்க மதுரை மாவட்ட ஆட்சியராக இருந்த சகாயம் தலைமையில் குழு அமைக்க உத்தரவிட்டதோடு, இரண்டு மாதங்களுக்குள் தனது அறிக்கையை அளிக்க வேண்டுமெனவும் கூறியது. இதனை எதிர்த்து தமிழக அரசு தாக்கல் செய்த மனுக்கள் உயர் நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் தள்ளுபடி செய்யப்பட்டன. இதனால் சகாயம் தலைமையில் குழுவை அமைத்து விசாரணை நடத்த தமிழக அரசு வேறுவழியின்றி உத்தரவிட்டுள்ள அதேசமயம், அதனைச் சீர்குலைக்கும் வேலையையும் செய்து வருகிறது.

இதையடுத்து கனிமவள முறைகேடு குறித்து மதுரை மாவட்டத்தில் மட்டும் விசாரிக்க வேண்டுமா, அல்லது தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும் விசாரணை நடத்த வேண்டுமா என்பதைத் தெளிவுபடுத்தக் கோரி சகாயம் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இதை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி கவுல் அடங்கிய அமர்வு, மதுரை மாவட்டத்தில் நடந்துள்ள கனிம வள முறைகேடுகள் பற்றி முதற்கட்டமாக விசாரித்தால் போதுமானது, இது பெரிய விவகாரம் என்பதால் கொஞ்சம் கொஞ்சமாக விசாரணையை விரிவுபடுத்திக் கொள்ளலாம் என்று மொன்னையாக தீர்ப்பளித்துள்ளது.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பொதுப் பணித்துறையின் துணையுடன் தனியார் நிறுவனங்கள் சட்டவிரோதமாக கனிமவளக் கொள்ளையில் ஈடுபட்டு வருவது யாவரும் அறிந்த உண்மை. ஆற்று மணல், செம் மண், கல் குவாரிகள், தாதுமணல், கிரானைட் உள்ளிட்ட அனைத்து வகையான கனிம வளக் கொள்ளையையும் சகாயம் குழு விசாரிக்க வேண்டுமென கோரிக்கைகள் வலுத்துள்ள நிலையில், தற்போதைக்கு மதுரை மாவட்டத்தில் மட்டும் விசாரித்தால் போதுமென நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளதன் மூலம் இதர மாவட்டங்களில் கனிம வளக் கொள்ளையில் ஈடுபட்டுவரும் கொள்ளையர்கள் தப்பிக்கவும், முறைகேடுகளை மூடி மறைக்கவும் கால அவகாசத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது, நீதித்துறை.

இதுவொருபுறமிருக்க, அரசு கணக்கின்படியே 16,000 கோடி ரூபாய் அளவுக்கு கிரானைட் ஊழலில் ஈடுபட்ட பி.ஆர்.பி. நிறுவனம், மதுரை தவிர இதர மாவட்டங்களில் குவாரி தொழிலில் ஈடுபடலாம் என்று சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை நீதிபதி ராஜா அண்மையில் உத்தரவு பிறப்பித்துள்ளார். உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த ஒரு வழக்கில், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி கையாண்டு வரும் வழக்கில் குறுக்கே புகுந்து தனியாக இப்படியொரு அயோக்கியத்ததனமான உத்தரவைப் பிறப்பித்து பி.ஆர்.பி. கும்பலின் பகற்கொள்ளை தொடர மதுரைக் கிளை நீதிபதியான ‘வசூல்’ ராஜா பச்சைக் கொடி காட்டியுள்ளார். மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் சார்பில் வழக்குரைஞர் வாஞ்சிநாதன் இதில் தலையிட்டு மனு தாக்கல் செய்த போதிலும், அதனை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே தீர்ப்பளித்திருக்கிறார் ராஜா.

இப்படித்தான் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூடச்சொல்லி சென்னை உயர் நீதிமன்றம் கடந்த 2010-ஆம் ஆண்டு அளித்த தீர்ப்பை முற்றாக ரத்து செய்து 2.4.2013-இல் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தமிழக அரசு மன்னார் வளைகுடாவைத் தேசிய கடல் பூங்காவாக அறிவித்திருப்பதை மைய அரசின் சுற்றுச்சூழல்

அமைச்சகம் இன்னும் அங்கீகரிக்கவில்லை என்று மொன்னையான காரணத்தை முன்வைத்து, ஸ்டெர்லைட் ஆலை தொடர்ந்து இயங்க தாராள அனுமதி அளித்தது. அதேசமயம் தனது அநீதி யானதீர்ப்பு அம்பலமாகாமலிருக்க, ஸ்டெர்லைட் ஆலை கடந்த 15 ஆண்டுகளில் ஏற்படுத்திய சுற்றுச் சூழல் பாதிப்புகளுக்கு ரூ.100 கோடி அபராதம் விதித்து தன்னை யோக்கியவானாகக் காட்டிக் கொண்டது. குற்றவாளிகளுக்கு அபராதம் விதித்து அவர்களைத் தண்டனையின்றித் தப்பிக்க வைக்கும் கட்டப்பஞ்சாயத்து நாட்டாமைகளின் தீர்ப்புக்கும் இதற்கும் வேறுபாடு ஏதும் இருக் கிறதா?




சிறிய பேருந்துகளில் வரையட்டிருப்பது இரட்டைஇலை ஓவியம் அல்ல, மாசு இல்லாத பேருந்தைக் குறிக்கும் பசுமை இலை ஓவியம் என்ற ஜெ தரப்பின் வாதத்தை ஒருபுறம் ஏற்றுக் கொண்டு,மறுபுறம் ஏற்காடு தேர்தல் முடியும்வரை தற்காலிகத் தடைவிதித்து ஜெ. மனங்கோணாதபடி பவ்யமாகத் தீர்ப்பளித்தது சென்னை உயர் நீதிமன்றம்.

இப்படி கட்டப்பஞ்சாயத்து நடத்தும் நீதி பதிகள், பொதுநல வழக்கு தொடுப்பவர்கள் மீதே குற்றம் சாட்டித் தண்டிக்கவும் தவறுவதில்லை. பத்திரி கையாளர் அன்பழகன், ''வழக்கத்துக்கு மாறாக சென்னை உயர்நீதிமன்றத்துக்கு 2015-ஆம் ஆண்டில் தீபாவளிக்கு 4 நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி வடமாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதால், வடமாநிலக் கலாச்சாரத்தை இங்கு திணிக்க முயற்சிக்கும் வகையில் கூடுதலாக விடுமுறை அறிவிக் கப்பட்டுள்ளதை ரத்து செய்ய வேண்டுமெனக் கோரி'' அண்மையில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக் கல் செய்தார்.

இதை தலைமை நீதிபதி எஸ்.கே.கவுல் அடங்கிய முதன்மை அமர்வு விசாரித்தபோது, தீபாவளி பண் டிகைக்குக் கூடுதல் விடுமுறை அவசியமா, இல்லையா என்பதையோ, இது வடமாநிலக் கலாச்சாரத்தைத் திணிக்கும் செயல்தானா என்பதையோ பரிசீலிக்காமல், மனுதாரர் மீது பாய்ந்தனர். மனுதாரர் பிரிவினைவாதத் துடன், நாட்டைப் பிரிக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார் என்று அபாண்டமாகக் குற்றம் சாட்டினர். இவர் விளம் பரத்துக்காக மனு தாக்கல் செய்து மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறார் என்று கூறி மனுவைத் தள்ளுபடி செய்து, எதிர்காலத்தில் இதுபோன்ற மனுக்கள் தாக்கல் செய்யப் படுவதைத் தடுக்கும் நோக்கில் வழக்கு செலவுக்காக மனுதாரருக்கு ரூ.20,000 அபராதம் விதித்து நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்தனர்.

இப்படி கடுமை காட்டும் நீதிபதிகளின் அணுகு முறையும் தீர்ப்பும் ஆளும் ஜெ. தரப்பின் வழக்கு என்றால் வேறு மாதிரியாக மாறிவிடுகிறது. ஏற்காடு இடைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், சென்னை மற்றும் புறநகரில் இயக்கப்படும் சிறிய பேருந்துகளில் ஆளும் கட்சியின் இரட்டை இலை சின்னம் வரையப்பட் டிருந்ததை எதிர்த்து, அதை நீக்கக் கோரி மு.க. ஸ்டாலின் தொடர்ந்த வழக்கை இழுத்தடித்த சென்னை உயர்நீதி மன்றம், பின்னர் இது இலை ஓவியம் அல்ல, மாசு இல்லாத பேருந்தைக் குறிக்கும் பசுமை இலை ஓவியம் என்ற ஜெ. தரப்பு வாதங்களைக் கேட்டுவிட்டு, இலை ஓவியத்தை உள்நோக்கம் எதுவும் இல்லாமல் தமிழக அரசு வரைந்துள்ளதாகக் கூறுவதை ஏற்பதாகவும், இருப் பினும், இது வாக்காளர் மத்தியில் குழப்பத்தை ஏற் படுத்தும் என்று தேர்தல் ஆணையம் கருதுவதால், அதன் முடிவை ஏற்று வழக்கைத் தள்ளுபடி செய்வதாகவும் ஜெ. மனங்கோணாதபடி பவ்யமாகத் தீர்ப்பளித்தது. ஜெ. கும்பல் திமிர்த்தனத்தைக் கண்டிக்கவோ, நீதிமன்ற நேரத்தை வீணடித்ததற்காக அபராதம் விதிக் கவோ அது முன்வரவில்லை.


கடந்த ஜூன் இறுதியில்11 மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்து 61 பேரைப் பலிகொண்டு, 27 பேரைப் படுகாயப்படுத்திய சென்னை - மவுலிவாக்கம் பயங்கரம்: இப்பகுதியை சீல் வைத்து விசாரணை நடத்த உத்தரவிட்ட உயர் நீதிமன்றம், விசாரணை முழுமையாக நிறைவடையாத நிலையில் அவசரமாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யக் கூடாது என்று கூறி குற்றவாளிகளைக் காப்பாற்ற இன்னமும் இந்த வழக்கை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது.



குற்றவாளிகளைத் தப்புவிக்க வழக்கை ஆண்டுக் கணக்கில் இழுத்தடிப்பது, எதிர்த்தரப்பு வாதங்கள் எதையுமே கேட்காமல் தீர்ப்பு கூறுவது, வழவழா கொழகொழாவென தீர்ப்புகளை எழுது வது, குற்றவாளிகளை எச்சரிப்பதுபோல நாடக மாடி சலுகை காட்டுவது, நீதிமன்ற உத்தரவுகளை மதிக்காத மத்திய-மாநில அரசுகளுக்குக் கண்டனம் தெரிவிப்பது, அரசு மீது நீதிமன்ற அவ மதிப்பு வழக்கு தொடுப்பது, பிறகு மன்னிப்பு வாங்கிக் கொண்டு வழக்கைத் தள்ளுபடி செய்வது என்பன போன்ற நடைமுறைகளெல் லாம் நீதித்துறையின் வாடிக்கையாகிவிட்டன. இந்த மானக்கேடான நிலைமை பற்றி மாட்சிமை தங்கிய நீதிபதிகள் கடுகளவும் வெட்கப்படு வதில்லை.

● மனோகரன்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.



உழைக்கும் வர்க்கத்தின் ஒத்திசைவாய்...
கீழைக்காற்று...
38 ஆவது
சென்னை புத்தகக் காட்சியில்
கீழைக்காற்று
09.01.2015 - 21.01.2015
ஒய்.எம்.சி.ஏ. உடற் கல்வியியல் கல்லூரி
நந்தனம், சென்னை-35
வேலை நாட்கள் : பிற்பகல் 2 - இரவு 9
விடுமுறை நாட்கள் : காலை 11 - இரவு 9
கருப்புப் பணம்
இந்திய இழிவு
கீழைக்காற்று
10, அவுலியா தெரு, எல்லீசு சாலை, சென்னை - 2. ☎ : 044 - 2841 2367

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14





அனுமதி 3 அடி; அள்ளியிருப்பது 35 அடி! – கார்மாங்குடி வெள்ளாற்றுப் படுகையில் நடந்துவரும் மணற்கொள்ளையின் கோரப் பதிவுகள்.